சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 4	இதழ்: 09	பிப்ரவரி - 2023	விலை - ரூ.15/-
VOL:4	ISSUE: 09	FEBRUARY - 2023	Rs. 15/-



சமயக்குரவோன் சுந்தர நாயனார்..!

சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ.550 மட்டும் செலுத்தி சந்தாதாரராகுங்கள்!

ரூ.501/மதிப்புள்ள அறிய பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"

* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.



* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: 501/ மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு-4 மலர்-9 பிப்ரவரி - 2023

வெளியிடுபவர் / ஆசிரியர்

V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்

திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

விளம்பர பிரிவு

திரு.T. கார்த்திகேயன், கோவை

கௌரவ ஆலோசகர்கள்

திருமதி. S.சாந்தி, சென்னை.

திருமதி.A.சரண்யா ஞானமூர்த்தி, சென்னை.

திருமதி.Dr.கீர்த்தி சௌஜன்யா, சென்னை.

திரு. B.முருகன், சோழவந்தான்.

டாக்டர் செல்வி. S.சௌம்யா, ஊட்டி

இதழ் வடிவமைப்பு

சிகரம் மீடியா (9840083174)

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்

எண்:17/7A. பழனியப்பா முதல் தெரு, 1-வது மாடி, அயனாவரம், சென்னை 600 023.

செல்: 99418 16692,88258 31068.

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.



என் அன்பு குழந்தையே..!

உன் மனம் தள்ளாடி கொண்டு இருக்கிறது. கடிவாளம் இல்லாமல் ஓடிக்கொண்டு இருக்கிறாய். என்றாவது ஒருநாள் விடியும் என்று காத்திருக்கிறாய் அல்லவா? நீ அனுபவித்து வரும் துயரங்களில் இருந்து கடினமான சூழ்நிலைகளில் இருந்தும் விடுபட துடிக்கிறாய். கவலைப்படாதே! மாற்றங்கள் நடக்க போகிறது. இனி வரும் காலங்களில் உன்னை பாராட்டி பெருமை படுத்த போகிறார்கள். நீ விரும்பிய வாழ்க்கையை வாழ போகிறாய்.

உன்னுடைய தோற்றங்கள் புது பொலிவுடன் அனைவரும் கவரும்படி இருக்கும். உன்னை தேடி அனைத்தும் வர போகிறது. பெயர் புகழோடும் வசதி வாய்ப்புகளோடும் திகழ போகிறாய் எதை பற்றியும் யோசிக்காதே. உனது எதிர் காலத்தை நான் நிர்ணயித்து இருக்கிறேன்.

நீ எப்படி வாழ வேண்டும் என்பதை நான் எழுதி கொண்டு இருக்கிறேன். உன்னை அனைத்திலும் சிறந்து விளங்கும்படி செய்வேன். உன்னோடு நான் இருப்பதை உணர்ந்து கொள்ளும் நேரம் வரும். என்னை சாதரணமாக நினைத்து விடாதே, அனைத்தும் அறிந்தவன் நான்.

எப்போது என்னை தேடி வந்து நானே சகலமும் என்ற நம்பிக்கையில் உனது வாழ்க்கையை ஒப்படைத்தாயோ அக்கணமே உன் பாவங்கள் மறைந்தது. இனி கலங்காதே எந்த சூழ்நிலையிலும் கை விடமாட்டேன் நான் இருக்கிறேன்.

- பகவான் ஸ்ரீ சாயிபாபா

ஆசிரியர் பக்கம்...



அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!

பகவான் சாயிநாதரின் அருளால் ஐம்பத்து ஐந்தாவது இதழ் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. சென்ற இதழின் வெளியீட்டு விழா 01.01.2023 ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு நமது சாய் தியானாலயா பிரார்த்தனை மையத்தில் (17/7A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி, அயனாவரம், சென்னை23) வெகு விமரிசையாக நடைபெற்றது.

வழக்கம்போல் காலை 8மணிக்கு ஆசிரியரின் சத்சங்கத்துடன் ஆரம்பித்த விழா, தியானம், பஜனை எனத் தொடர்ந்தது. காலை 10 மணிக்கு சிறப்பு விருந்தினர்கள் வருகை தரவும் புத்தக வெளியீட்டு விழா ஆரம்பமானது. சென்ற மாத இதழில் சித்தர்கள் சீவ சமாதி தரிசனத்தில் இடம் பெற்றிருந்த ஞானகுரு ஸ்ரீ இராகவசாமி சித்தரின் குமாரர் திரு. மதிபூரணம் அவர்கள், இம்மாத இதழை வெளியிட, சுவாமிகளின் பேரன் திரு. உதயரிஷி அவர்கள் பெற்றுக் கொண்டு சிறப்பித்தனர்.

திரு. மதிபூரணம் அவர்கள் தனது தந்தையும், ஞான குருவுமாகிய ஸ்ரீ இராகவ சுவாமிகளைப் பற்றி தனது நினைவலைகளை பக்தர்களுடன் பகிர்ந்து கொண்டார்கள். சித்தர் சீவன் திரு. வெங்கடேசன் அவர்களும் தனது அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்கள். ஆசிரியர் அவர்கள் விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறி விழாவை நிறைவு செய்தார்கள்.



புத்தக வெளியீட்டிற்கு வந்திருந்த அனைத்து பக்தர்களுக்கும், சாய் தியானாலயா பிரார்த்தனை மையம் சார்பில் அன்னதானம் வழங்கப் பட்டது. மேலும் இதழ் வெளியீட்டை ஒட்டி ஏழை எளியவர்களுக்கு அவர்கள் இருக்கும் இடம் தேடிச்சென்று அன்னதானம் வழங்கப் பட்டது.

இம்மாத இதழ் 100 ஐ தன் சொந்த செலவில் வாங்கி அரக்கோணம் ஸ்ரீ சச்சிதானந்த

சாயிபாபா திருக்கோவிலில் ஆங்கிலப்புத்தாண்டை ஒட்டி சிறப்பு நாம செபம் செய்து பக்தர்க ளுக்கு வழங்கி சாயி சேவை செய்த "பகவான்நாம தாசன்" திருநின்றவூர் திரு. முரளி சாய்ராம். அவர்களுக்கு நமது இதழின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கை யாக்கி, அவர்தம் உற்றார் உறவுகளோடு நீள் ஆயுள், நிறை செல்வம், வான் புகழ், மெய்ஞ்ஞானம் பெற்று வாழ்க வளமுடன் என்று பகவான் சாயிநாதரிடம் பிரார்த்திக்கின்றோம்.



அதுபோலவே, கன்னியாகுமரி திரு. தமிழரசன் அவர்கள், இரண்டு ஆயுள் சந்தாவும், குடந்தை திரு.கேசவன் அவர்கள் ஐந்து மூன்று வருட சந்தாவும், வேதாரண்யம் திரு. நாகரத்தினம் அவர்கள் மூன்று, ஒரு வருட சந்தாவையும் இணைத்து சாயி சேவை செய்திருக்கின்றார்கள். அவர்களும், அவர்களது குடும்பத்தார் அனைவரும்



நீள் ஆயுள், நிறை செல்வம், வான் புகழ் மெய்ஞானம் பெற்று வாழ்க வளமுடன் என்று பகவான் சாயிநாதரிடம் பிரார்த்திக் கின்றோம்.

நமது இதழ், எவ்வளவோ இடை யூறுக்களுக்கு இடையே யும், பொருளாதார கஷ்டங் களையும் சமா ளித்து, பகவான் சாயிநாதரின் பேரரு ளாலும், அவர்தம் ஆசிபெற்ற தன்னலம் கருதாத சேவகர்களாலும் தொடர்ந்து ஐம்பத்து ஐந்து இதழ் களாக வெற்றிகரமாக வெளிவந்து கொண் டிருக்கின்றது.

நமது "சாயி மகராஜ் குருவை தேடி" ஆன்மீக மாத இதழ் இதுவரை கடை களின் மூலமோ,



ஏஜெண்ட் மூலமாக வோ மக்களி டம் சென்று சேரவில்லை. இதழைப் படித்து அதன்மூலம் பயன் பெற்றவர்கள், தான் பெற்ற பயனை மற்றவர்களும் பெற வேண்டும் என்ற நல்ல நோக்கத்தின் பொருட்டு நமது இதழை மற்ற பக்த்களுக்கும் அறி முகப்படுத்துவதின் மூலமே, நமது இதழ் தமிழகம் மற்றும் அண்டை மாநி லங்களுக்கும், சில வெளி நாடுகளில் இருக்கும் பகவான் சாயிநாதரின் இல்லங்களுக்கும் சென்றடைந் திருக்கின்றது.

இது பகவான் சாயிநாதரின் பெருங் கருணையே ஆகும். நமது இதழை மற்ற பக்தர்களுக்கு அறிமு கப்படுத்தி சாயி சேவை புரிந்த பக்தர்களுக்கு சாயிநாதர் அவர்களின் வாழ்வில் பல்வேறு அற்புதங்களை நிகழ்த்தி யிருக்கின்றார் என்பதை சம்பந்தப்பட்ட சாயிபக்தர்கள் நன்கறிவர்.

இவ்விதழை படிக்கும் சாயி பக்தர்களாகிய நீங்களும் இதில் வெளி வரும் கருத்துக்கள் உங்களுக்கு பிடித்திருந்தால், மற்ற சாயி பக்தர்களும் படித்து பயன்பெற வேண்டும் என்று விரும்பினால், உங்களுக்கு தெரிந்த சாயி பக்தர்களுக்கு நமது "சாயி மகராஜ் குருவைதேடி" இதழை கொண்டு சேர்த்து சாயி சேவை புரியுங்கள்.

அனைவரையும் பகவான் சாயி தனது அருள் வளையத்திற்குள் கொண்டுவந்து பல அதிசயங்களை நிகழ்த்துவார். இது சத்தியமான உண்மை. அனைவரும் சாயி பக்தியில் இணைந்து சாயி மார்க்கத்தில் வளர்வோம்.

பகவான் சாயிநாதரின் அருளால் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று, உலக மாந்தர்கள் அனைவரும் போர், பகை, அச்சமின்றி, ஆரோக்கியத் துடனும், நிம்மதியுடனும் வாழ வேண்டும் என பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம். **மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்!**

வாழ்க வளமுடன்!
வாழ்க வையகம்!

- அன்புடன் ஆசிரியர்

மாமனிதர் மகல்சாபதி



*1908*ல் உலகம் முழுவதும் பிளேக் நோய் மிகத்தீவிரமாக பரவிக் கொண்டிருந்தது. ஏராளமான மனிதர்கள் பிளேக் தொற்றால் மடிந்து கொண்டிருந்தனர். அந்நாளைய குக்கிராமமான சீரடியையும் பிளேக் விட்டுவைக்கவில்லை. சாயிபாபா தன்னுடைய பக்தர்களுக்கு, "என்னை மீறி எதுவும் நடக்காது. துவாரகாமாயி உங்களை பாதுகாப்பாள்" என்று உறுதி கொடுத்தார்.

பாபாவின் மீது அதீத பக்தியும், நம்பிக்கையும் இருந்ததால் மகல்சாபதி பாபா நோய்க்கு எதிராக தேவையானதைச் செய்வார் என்று பயப்படாமல் அன்றாட வேலைகளை செய்து வந்தார். ஆயினும், அவரது மனைவி மற்றும் மகள் நோய் வாய்ப்பட்டனர், விரைவில், அவரது குடும்பத்தில் உள்ள மற்ற உறுப்பினர்களும் நோய்வாய்ப்பட்டனர்.

அதேநேரம் சீரடில் பாபாவைப் பார்க்க வரும் பார்வையாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. அரசாங்கம் நோய்வாய்ப்பட்டவர்களை கவனிக்க, மருத்துவர்களை அனுப்பி வைத்தது. இதற்கிடையில், பாபா மஹல்சாபதியிடம், 'நோயாளிகள் படுக்கையில் அமைதியாக இருக்கட்டும்' என்று கூறினார்,

மேலும் பாபா தனது சிறிய குச்சியுடன் தனது மசூதியைச் சுற்றி நடந்து கொண்டிருந்தார், பாபா தனது குறுகிய குச்சியை அசைத்து மிரட்டும் வார்த்தைகளைப் பயன்படுத்திக் கொண்டிருந்தார். வா, உங்கள் சக்தி எதுவாக இருந்தாலும், பார்ப்போம். நீங்கள் வெளியே வந்து என்னை எதிர்கொண்டால், எனது சோட்டா குச்சியால் என்ன செய்ய முடியும் என்பதை நான் உங்களுக்குக் காட்டுகிறேன். என்று கூறிக்கொண்டே நடந்து கொண்டிருந்தார். இதுவே பாபாவின் நோய்க்கான சிகிச்சை.

இருப்பினும், ஏராளமான நோயாளிகளுக்கு, மருத்துவர்கள் மருந்துகளை வழங்கினார்கள். மகல்சாபதிக்கும் அவரது நோய்வாய்ப்பட்ட குடும்பத்திற்கும் மருத்துவர்கள் மருந்துகளை வழங்க, மஹல்சாபதி மருந்துகளை

எடுத்துக் கொள்வது பற்றி பாபாவிடம் ஆலோசித்தார், மருந்துகளை எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று பாபா தடுத்துவிட்டார்.

மகல்சாபதி குடும்பத்தினரும் ஏனைய பக்தர்களும், மருந்து எடுத்துக் கொள்ள வில்லை. இருப்பினும் மற்றவர்களை விட விரைவாக மருந்து இல்லாமல் அனைவரும் குணமடைந்தனர். நோயை எதிர்த்துப் போராடுவதற்கு பாபாவின் வழி நவீன மருத்துவ முறை அல்ல, ஆயினும் அது சந்தேகத்திற்கு இடமின்றி பயனுள்ளதாக இருந்தது.

பாபா "பகத்திற்கு" வரவிருக்கும் நிகழ்வுகளைப் பற்றிய தனது அறிவைப் பயன்படுத்தினார். தேவைப்படும்போது அவற்றை அவருக்கு வெளிப்படுத்தினார். அவர் ஒரு ஏழை, அவருடைய மூன்று மகள்கள் பல்வேறு கிராமங்களில் உள்ளவர்களுக்கு திருமணம் செய்து வைத்தார். அவரது சம்பந்திகளுக்கு அவரைப் பற்றி எந்த அக்கறையும் இல்லை.

ஒரு சமயம், தொலைதூர கிராமத்தில் உள்ள சம்பந்திகளில் ஒருவர் அவரைத் தன்னுடன் உணவருந்த அழைத்தார், மகல்சாபதி பாபாவின் சென்று அனுமதி கோரினார். பாபா கூறினார், "அங்கு நீ அவமதிக்கப்படப் போகிறாய்". இருப்பினும் சம்பந்தியின் அழைப்பை மறுக்க முடியாமல் பாபாவிடம் விடைபெற்று மகல்சாபதி தனது நண்பருடன் சம்பந்தி வீட்டுக்குச் சென்றார்,

ஆனால் அவர் அங்கு சென்றபோது, சம்பந்தியின் வீட்டார்கள் ஏற்கனவே உணவை முடித்துவிட்டு கைகளை கழுவுவதைக் கண்டார். மகல்சாபதி, அவர்களின் மோசமான செய்கையால் வெளிப்படையான அவமானம் ஏற்பட, அவர் உணவை சாப்பிட மறுத்து ஊர் திரும்பினார், அவர் துவாரகாமாயி வந்து பாபாவிடம் அனைத்து உண்மைகளையும் கூறி மன்னிப்பு கோரினார்.

மற்றொரு சந்தர்ப்பத்தில்,பாபாவின் பக்தரான ராம் பாவ் ஹர்டே, மகல்சாபதியை தனது கிராமத்திற்கு அழைத்து, கந்தோபா புராணத்தை படித்து பூஜை செய்ய அழைத்தார். ஷீரடியிலிருந்து பத்து மைல் தொலைவில் உள்ள கிராமமான 'அஸ்தினகிராமத்திற்கு' மஹல்சாபதி செல்ல வேண்டும். இரவு வெகு நேரமாகி விடும் என்பதால், மகல் சாபதிக்கு இரவு உணவு அங்கேயே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பாபாவிடம் விடைபெற மஹல் சாபதி சென்ற போது, பாபா, "இரவு உணவை அங்கே சாப்பிடாதே! புராணம் வாசித்துவிட்டு உடனே புறப்பட்டுவிடு தாமதித்தால் அங்கே சண்டை வரும்" என்றார்.

மகல்சாபதி அந்த ஊருக்குச் சென்று, புராணம் படித்துவிட்டு புறப்படும் நேரம் அவரது நண்பர் வற்புறுத்தியதால் உணவு உண்ண அமர்ந்தார். அதே நேரம் உணவிற்காக அமர்ந்திருந்த ஊர்க்காரர்கள் சூடான வார்த்தைகளை பரிமாறிக்கொண்டனர். விரைவிலேயே தடிகளால் அடித்துக் கொண்டனர், புராண வாசிப்புக்கு வந்திருந்த பார்வையாளர்கள் பயந்து ஓடினர், மஹல்சாபதியும் தனது புராணத்தை மூட்டை கட்டிக்கொண்டு ஓடி வர வேண்டியிருந்தது.

1897ல் மஹல்சாபதி ஒரு ஆண்



குழந்தையைப் பெற்று, பாபாவிடம் அழைத்துச் சென்று, குழந்தைக்கு பெயர் சூட்ட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். பாபா, அந்த மகனிடம் மகல்சாபதி அதிகப் பற்று வைப்பதை தடுப்பதற்காக "குழந்தையை கவனித்துக்கொள்ள. 25 ஆண்டுகள் போதுமானதாக இருக்கும்." என்றார்.

மகல்சாபதி இதையெல்லாம் புரிந்து கொள்ளவில்லை, 1922 இல் முடிவடையவிருந்த அவரது வாழ்க்கையின் நீளத்தை பாபா சூட்சுமமாக கூறிய "25 வருடங்கள்" சுட்டிக்காட்டுகின்றன.

ஆனால் உண்மையான பணிவு மற்றும் நம்பிக்கையுடன் மகல்சாபதி பாபாவிடம் பக்தி பூண்டிருந்தார். மேலும் குழந்தையின் எதிர்காலம் தனது சக்தியில் இல்லை, அது பாபாவின் சக்தியில் மட்டுமே உள்ளது என்று நம்பினார். ஆயினும் பாபாவின் பதில் இன்னும் முக்கியமானது. பாபா மகல்சாபதியிடம் குழந்தையை கவனித்துக் கொள்ளும் பொருட்டு "நிமித்தமாக நீயே இரு" என்றார்.

மகாபாரதப் போரில் தயங்கி நின்ற அர்ஜுனனுக்கு, ஸ்ரீ கிருஷ்ணர் "வெறும் கருவியாக" நின்று போரிடுமாறு அறிவுறுத்தியதை சாயி நாதர் மகல்சாபதிக்கு நினைவுபடுத்தினார்.

பாபா, தான் அல்லாவிடம் செல்லப்போவதாகவும், திரும்பிவர மூன்று நாட்கள் ஆகும். அதுவரை என் உடலை உன் மடிமீது வைத்து பாதுகாப்பாயாக என்றபோது, மூன்று நாட்கள் பாபாவின் உடலை, நம்பிக்கையாகவும், அதேநேரம் தன்னை சுற்றியுள்ளவர்கள் பாபா திரும்பி வரமாட்டார் என்று எவ்வளவோ எடுத்துக் கூறியும், பாபாவின் உடல் உயிர் பெறும்வரை பொறுமையாகவும் இருந்தவர் "மாமனிதர்" மகல்சாபதி.

பொருள் மிகுந்தவர்கள் பலர், மகல்சாபதியின் வறுமை நிலைகண்டு அவருக்கு பொருள் உதவி செய்ய முன் வந்த போது, அதை பிடிவாதமாக தவிர்த்தவர் மகல்சாபதி, பாபா கூறினால்தான் பொருளை பெற்றுக் கொள்வார் என்று நினைத்தவர்கள் பாபாவிடம் முறையிட, பாபாவோ

"அவன் ஒருவனாவது பொருளுக்கு அடிமையாகாமல் இருக்கட்டும்" என்று கூறி அவரை இறுதிவரை இறைமனிதனாக வாழ வைத்தார்.

சாய் தியானாலயாவில் "சாயி லீலா"

– ஜெயந்தி ஸ்ரீராம்

சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழ் முழுக்க, முழுக்க, பகவான் சாயிநாதரால் நடத்தப்படும் இதழ். அதனால்தான் இன்றுவரை எங்களின் பங்களிப்பாக ஒரு ரூபாய் கூட இல்லாமல் தொடர்ந்து ஆறாவது ஆண்டை நோக்கி வெற்றி நடை போட்டுக் கொண்டிருக்கின்றது.

கடுமையான கொரானா காலகட்டத்தில் கூட இதழ் தடைபடாமல் வெளிவந்ததற்கு பகவான் சாயிநாதரே காரணம். "என் கடன் பணி செய்து கிட்பதே" என்பதற்கிணங்க, சாயிநாதர் எங்களுக்கிட்ட பணியை செய்வது மட்டுமே எங்களது வேலை. மற்ற எதைப் பற்றியும், குருவோ, நாங்களோ சிந்திப்பதில்லை.

பகவான் சாயிநாதர் இந்த புத்தகத்தின் மூலம் அநேக அதிசயங்களைப் நிகழ்த்திருக்கின்றார். ஒருமுறை அணைக்கரையைச் சேர்ந்த பாபாவின் பக்தர் ஒருவர், வாழ்க்கையில் மிகவும் விரக்தியடைந்து இனி வாழ்ந்து பயனில்லை. ஆற்றில் விழுந்து உயிரை மாய்த்துக் கொள்ளலாம் என்ற சிந்தனையில் ஆற்றில் குதித்து உயிர்விடும் எண்ணத்தில் அணைக்கரை பாலத்தில் நடந்து சென்றிருக்கின்றார்.

அது இரவு பத்து மணி, ஓரிடத்தில் நின்று பாலத்தின் கைப்பிடி சுவற்றில் ஏறி ஆற்றில் குதிக்க முற்படுகையில் சுவற்றில் கை வைத்த இடத்தில்



ஒரு புத்தகம் இருந்திருக்கின்றது. எடுத்துப் பார்த்தால் அது நம் "சாயி மகராஜ் குருவைத்தேடி" இதழ். அந்தப் புத்தகத்தை கையில் எடுத்துப் பார்க்கின்றார்.

அட்டைபடத்தில் இருந்த பாபா அபயகரம் காட்டி புன்னகைத் திருக்கின்றார். பாபாவின் படத்தைப் பார்த்த அக்கணமே தன் மனதில் இருந்த தற்கொலை எண்ணங்கள் மறைந்து விட்டதை உணர்ந்திருக்கின்றார்.

அவரின் மனதிற்குள் ஏதோ ஒரு மாற்றம். தன்னுடைய தற்கொலை எண்ணத்தை மாற்றிக்கொண்டு வெளிச்சம் உள்ள பகுதிக்கு புத்தகத்தை எடுத்து வந்து புத்தகத்தை புரட்டியிருக்கின்றார். முதல் பக்கத்தில் வரும் அமுத மொழி அவரது கண்ணில் பட அதை படித்திருக்கின்றார். அதில்

பாபாகூறுவதாக எழுதப்பட்ட,

என் அன்புக் குழந்தையே!

எந்த ஒரு சூழ்நிலையிலும் கவலை கொள்ளாதே! பயப் படாதே! அப்படிப்பட்ட சூழ்நி லையிலும் நீ என்னை மனதார நினைத்தால் மறுகணமே நான் உன்னுள் இருப்பேன்

எனது பக்தனாகிய உனது வாழ்வில் நடக்கும் எந்த ஒரு செயலும் எனது அனுமதியின்றி நடக்காது. உனது வாழ்வில் என்ன நடந்தாலும் உனது நன்மைக்காக மட்டுமே நான் நடத்துகின்றேன் என்று முழுமையாக நம்பு! உனது வாழ்வில் இனி நீ சுகங்களை மட்டுமே அனுபவிப்பாய்!

தாய் எப்படி தன் குழந்தைக்கு ஒவ்வொன்றையும் பார்த்து பார்த்து செய்வாளோ அதைப் போன்று நான் உனக்கு நன்மையானவற்றை பார்த்துப் பார்த்துச் செய்வேன். எனது பக்தனாகிய நீ இனி எதற்கும் கவலைப் பட வேண்டாம். பயப்படவும் வேண்டாம். இனி உன் வாழ்க்கையில் நடக்கப் போகும் அற்புதங்களை மகிழ்ச்சியோடு அனுபவிப்பாய் இது என் வாக்கு. என்பதை படித்து முடித்தவுடன் அவருக்குள் புதிய உற்சாகமும், நம்பிக்கையும் ஏற்பட்டிருக்கின்றது.

ஆம் நானும் பாபா பக்தன்தான். பாபா இருக்கும் போது நான் ஏன் கலங்க வேண்டும். நிச்சயமாக பாபா எனக்கு வேண்டியதைச் செய்வார். எனக்குத் துணையாக என் சாயி தேவன் இருக்கையில் நான் ஏன் தவறான முடிவெடுக்க வேண்டும். இனி நான் ஒருபோதும் தவறான முடிவிற்கு செல்ல மாட்டேன் என்று முடிவெடுத்திருக்கின்றார்.



இதை உடனே அந்தப் பத்திரிக் கையின் ஆசிரியரிடம் கூற வேண்டும் என்று உந்துதல் ஏற்பட இரவு 12 மணிக்கு குருவிற்கு போன் செய்கின்றார். எப்போதும் இரவு பத்து மணிக்கெல்லாம் உறங்கும் பழக்கமுடைய குரு இரவில் வரும் தொலைபேசி அழைப்பை எடுக்க மாட்டார். அன்று எண்ணவோ உறக்கத் தில் இருந்து எழுந்து போனை எடுக் கின்றார்.

அந்த நபர், என் பெயர் கோவிந் தராஜன். அணைக்கரை எனது ஊர் என்று தனக்கு ஏற்பட்ட அனுபவங்களை குருவிடம் கூறி தான் அந்தப் புத்தகத்தை பார்க்கவில்லை என்றால் எனது உயிரை மாய்த்துக் கொண்டிருப்பேன். தக்க சமயத்தில் உங்கள் புத்தகத்தை பார்த்ததினால் பாபா என்னைக் காப்பாற்றி விட்டார். உங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி என்று கூறினார்.

குருவும், நீங்கள் பாபாவின் பக்தர் என்று கூறிக்கொள்வதில் பெருமை இல்லை. எப்போது பாபாவின் பக்தராகி அவரை நேசிக்க ஆரம்பித்தீர்களோ அந்த விநாடியில் இருந்து அவர், உங்களது ஒவ்வொரு செயலையும் கவனித்துக் கொண்டு இருக்கின்றார் என்று உணர்வதுதான் பாபா



பக்தர்களாகிய நமக்கெல்லாம் மிகப் பெரிய பெருமை.

ஏனெனில் இந்த உலகத்தில் நாம் அநேகருடன் பழகி வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஆயிரம்தான் அவர்களுடன் மிக நெருக்கமாக வாழ்ந்து கொண்டிருந்தாலும், தாய், தகப்பன், சகோதர சகோதரி, மாமன் மச்சான், சித்தப்பா, பெரியப்பாவாக இருந்தாலும் அதிகப்பட்சமாக அவரவர், அவரவரைத்தான் பார்த்துக் கொள்ள முடியும். அதுதான் இயற்கை.

ஆனால் நம் சாயிதேவனோ, தன்னை நம்பும் மனிதனை மட்டுமல்ல, ஏனைய சீவராசிகளையும் எந்த நேரமும் காத்து ரட்சித்துக் கொண்டிருக்கும் கண்கண்ட தெய்வம். என்பதை நாம் உணர்ந்து கொண்டால், "எப்போது எதை நமக்கு தரவேண்டுமோ, அப்போது அதை நமக்கு தவறாமல் தந்து விடுவார்" என்ற நம்பிக்கை ஏற்பட்டுவிடும். பிறகு நம் சுமையை சுமக்கும் சாய்தேவனிடம் கேட்டுப்பெற என்ன இருக்கின்றது?

எல்லாவற்றையும் பாபா பார்த்துக் கொண்டிருக்கின்றார் என்ற பரிபூரண நம்பிக்கையை மனதில் வைப்போருக்கு இந்த பூமியில் நடக்காத காரியம் என்பதே இல்லை. எனவே உங்களுக்கு ஆக வேண்டி காரியங்களை பற்றி நினைத்துக் கொண்டிருக்கும் மனதை மாற்றி, அதற்குப்பதில் சாயிநாதனின் நாமத்தையே உச்சரித்து வாருங்கள். உங்கள் காரியங்கள் தானாக நடக்கும். என்று கூறினார்.

குரு கூறியதைப் பின்பற்றிய அந்த நண்பர் அணைக்கரை திரு. கோவிந்தராஜன் அவர்கள், ஒரு வருடத்திற்குள்ளாக தன்னுடைய அனைத்து பிரச்சனைகளையும் பாபா தீர்ந்துவைத்துவிட்டார் என்றும், தற்போது மனநிம்மதியுடன் இருப்பதாகவும் குருவிடம் பகிர்ந்து கொண்டார்.

மேலும், நமது இதழுக்கு தன்னை ஆயுள் சந்தாதாரராக இணைத்துக் கொண்டதோடு மட்டுமின்றி தனக்கு தெரிந்தவர்களிடம் எல்லாம் சாயி தேவனைப் பற்றியும், நமது இதழைப் பற்றியும் எடுத்துக் கூறி "தான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பதற்கிணங்க சாயி சேவையாற்றுகிறார்.

இவரைப்போன்றே ஓர் அன்புச் சகோதரி இல்லறத்தில் ஏற்பட்ட ஏமாற்றத்தின் காரணமாக தான் இனி வாழ்ந்து பயனில்லை என்ற முடிவிற்கு வந்தவள் தான் வணங்கும் சாயிநாதனை இறுதியாக வணங்கிவிட்டு உயிரை விட்டுவிட நினைத்தவள் கையில் தூக்க மாத்திரை குப்பியுடன் பாபாவின் ஆலயத்திற்கு வந்தவளின் கைகளில் நமது சாயி மகராஜ் குருவை தேடி இதழ் கிடைக்கின்றது.

இறுதியாக அந்தப் புத்தகத்தை படித்துவிட்டு உயிரை மாய்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்துடன் இரவு பத்து மணிக்கு தான் அடிக்கடி வரும் பாபா கோவில் வாசலில் அமர்ந்து படிக்கின்றாள். அது 2018 ஆகஸ்ட் மாத இதழ்.

அந்த இதழை எடுத்துப் பிரித்ததும் "பக்த லீலாமிர்தம்" என்ற தலைப்பில் சென்னையைச் சேர்ந்த திருமதி.பத்மா என்பவர் தனது அனுபவங்களை எழுதியிருந்த கட்டுரை வருகின்றது. அதில் தான் அனுபவித்த துன்பங்களுக்கு குரு. ஸ்ரீராம் அவர்களின் வழிகாட்டுதலின் படி பாபாவின் மீது முறையான பக்தி செலுத்தி, தியானத்தின் மூலம் எப்படி தன் துன்பத்தில் இருந்து மீண்டு வந்தேன் என்பதை எழுதியிருந்தார். அதைப் படித்துப் பார்த்த சகோதரிக்கு மனதிற்குள் ஒரு புதிய நம்பிக்கை பிறக்கின்றது.

இவ்வளவு சிரமத்தில் கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் இவர்களே பாபாவை நம்பி மீண்டு வந்திருக்கின்றார்கள். நாம் ஏன் நமது துன்பத்தில் இருந்து மீண்டு வரமுடியாது. என்று சிந்தித்து இருக்கின்றாள்.

நாமும் பலகாலமாக பாபாவின் பக்தை யாக இருக்கின்றோம். இருப்பினும் நமக்கு ஏற்பட்ட துன்பங்கள் தீரவே மாட்டேன் என்கிறதே! ஒருவேளை நான் பாபாவிடம் முறையிடுவதில் ஏதும் தவறிருக்குமோ! அந்தக் கட்டுரையில் எழுதியிருப்பது போல் குரு ஸ்ரீராம் அவர்களை சந்தித்து இதற்கான விளக்கத்தைப் பெறுவோம். என்று நினைத்தவள் உடனடியாக இரவு 11மணிக்கு குருவை தொடர்பு கொண்டு விபரத்தைக் கூற, குருவோ,



உங்களுக்கு நேரம் இருக்குமானால் நாளை என்னை நேரில் வந்து சந்தியுங்கள் என்று கூற, அந்த சகோதரி மறுநாளே குருவை நேரில் சந்தித்து விளக்கங்களைப் பெற்று மன அமைதி பெற்றாள்.

அன்றிலிருந்து மாதந்தோறும் தன்னாலியன்ற புத்தகங்களைப் பெற்று பாபாவின் பக்தர்களுக்கு இலவசமாக வழங்குவதை பாபாவின் சேவையாக செய்து கொண்டு இருக்கின்றாள்.

அடுத்து திருநெல்வேலியைச் சேர்ந்த திரு.சுப்பிரமணியன் என்ற 80 வயதுடைய பாபாவின் பக்தர் ஒருவர் குருவினை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு விபரத்தைக் கூறினார்.

தன்னுடைய நண்பர் ஒருவர் மதுரையில் இருந்து தனக்கு சாயி மகராஜ் குருவைதேடி இதழை அனுப்பி வைத்ததாகவும். தனக்கு வந்த இதழை

தான் படிக்கலாம் என்று பிரித்த போது புத்தகத்திற்குள் இருந்து பாபாவின் உதி கொட்டிக்கொண்டே இருப்பதாகவும், தான் அந்த உதியை என்ன செய்வது என்று தெரியவில்லை என்றும் தெவித்தார்.

அவர் மேலும், தான் பாபாவின் நெடுங்கால பக்தர் எனவும் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பே மதுரையில் இருந்து மிதிவண்டியிலேயே சீரடிக்குச் சென்று வந்ததாகவும் தெரிவித்தார். தன் வாழ்வில் இப்படி ஒரு அதிசயம் இப்போதுதான் நடக்கின்றது என்றும் உதி அதிகமாக சேர்ந்து வருகின்றது என்றும் அதை என்ன செய்வது என்றும் மீண்டும் கேட்டார்.

குருவோ, இவை எல்லாம் பாபா விற்கு அதிசயங்கள் இல்லை. பாபாவின் இயல்பே அதுதான். நமது இயல்பு அதுவில்லாததினால் நமக்குத்தான் அவை அதிசயங்களாகத் தெரிகின்றது.

நீங்கள் இந்த அதிசயங்களிலேயே மனதை நிறுத்திவிட்டால் அதைத் தாண்டிய ஆன்மீக அதிசயங்களை உங்களால் காண முடியாமல் போகும். எனவே புத்தகத்தில் வரும் உதி உங்களுக்கானது என்று நினைக்காதீர்கள். பாபா தன்னுடைய "குருவிகளுக்காக" (பக்தர்களுக்காக) உங்கள் மூலமாக உதியை அனுப்புகிறார்.

யாருக்கு உதி தேவைப்படுகிறதோ அந்த நபரையும் பாபாவே அனுப்புவார். அவர்களுக்கு அந்த உதியை தாராளமாக கொடுங்கள். மேலும் உங்களுக்கும், உங்களைச் சுற்றி இருப்பவர்களுக்கும், நோய்வாய்பட்டவர்களுக்கும், பாபாவின் உதியை மருந்து எனக் கொடுங்கள். நம்பிக்கையுடன் எடுத்துக் கொள்ளுங்கள். பாபாவின் உதியை விட இந்த உலகத்தில் வேறு சிறப்பாக குணமளிக்கும் மருந்து வேறில்லை. என்று கூறினார்.

அந்த பாபா பக்தரும், குரு கூறிய படியே அனைவருக்கும் உதியை அளித்து வருவதாகவும், இந்த சேவை தனக்கு, தனது கடைசி காலத்தில் மிகுந்த மன அமைதியை தருவதாகவும், இந்த அற்புதத்தை தன் வாழ்வில் நிகழ்த்திய பாபாவிற்கும், தகுந்த விளக்கத்தை தக்க சமயத்தில் அளித்து தனது தலைகனம் ஏறாமல் காத்த தங்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக! என தன் நன்றியினை குருவிடம் பகிர்ந்து கொண்டார்.

இந்த மூன்று சம்பவங்களிலுமே, சம்பந்தப்பட்டவர்களுக்கு, நமது இதழை யார் வழங்கியவர் என்று தெரியாது. சம்பந்தப்பட்ட ஊர்களுக்கும் நமது அலுவலகத்தில் இருந்து புத்தகம் அனுப்பப்படவில்லை என்பதுதான் நடந்த "சாயி லீலைக்கு" ஆதாரம்.

சமீபத்தில் நடந்த நமது இதழின் ஐந்தாம் ஆண்டு விழாவிற்கு வந்த திரு. "உதி" மூர்த்தி அய்யா அவர்கள்,(மூர்த்தி அய்யா அவர்கள், யார் பாபாவின் புத்தகங்களை வெளியிட்டாலும் அதை அதிக அளவில் வாங்கி பக்தர்களிடம் கொண்டு சேர்ப்பதில் முதன்மையாக செயல் படுபவர்) நான் எங்கே சென்று உங்களது சாயி மகராஜ் புத்தகத்தை அளித்தாலும் அங்கே ஏற்கனவே புத்தகம் வந்து விட்டது என்று காட்டுகின்றார்கள் என்று செல்லமாக கோபித்துக் கொண்டார்.

ஆனால் சர்வ நிச்சயமாக நாங்கள் அனுப்பவில்லை. அப்படி என்றால், புத்தகத்தை நடத்துவது மட்டுமில்லாமல், புத்தகம் யார் யாருக்கு கிடைக்க வேண்டும் என்பதையும் பாபாவே பார்த்துக் கொள்கின்றார் என்பதுதானே உண்மை.

- தொடரும்...



பைரவ சாய் பீடம்

மேல காரைக்காடு, திருநாராயணபுரம் - 621203
தொட்டியம் வட்டம், திருச்சி மாவட்டம், தமிழ்நாடு
குருஜி பைரவ பாபா - +91 9976919106

உங்கள் பிரச்சனைகள் கோரிக்கைகள் எதுவாக இருந்தாலும்
உடனடியாக மாற்றம் முன்னேற்றம் வெற்றி கிடைத்திட

சாய் சங்கல்ப பூஜை

(சாய் துனி ஹோமத்துடன்)

உங்கள் வாழ்வில் தொடர் துன்பம் வறுமை நோய் கடன் திருமணம் குழந்தையின்மை வேலை தொழில் கல்வி எதிரிகள் கணவன் மனைவி பிரிவு – சண்டை சொத்து வழக்கு தகாத உறவு போன்ற எந்த பிரச்சனையாக இருந்தாலும் தீர்வு நிச்சயம் வெளிநாட்டினரும் இந்த பூஜையினை செய்யலாம்.

இந்த பூஜையை நம்பிக்கையுடன் துவங்கிய அன்றே பலன் பெற்றவர்களும் உண்டு. 5 நாட்களில் பலன் பெற்றவர்களும் உண்டு. 15 தினங்களில் பலன் பெற்றவர்களும் உண்டு. 1 மாதத்தில் பலன் பெற்றவர்களும் உண்டு.

உபதேசம் பெற 9976919106 என்ற வாட்ஸ் அப் எண்ணிற்கு உங்கள் பெயர் ஊர் மற்றும் சாய் பூஜை என மட்டும் மெசேஜ் அனுப்பவும்.
எவ்வித கட்டணங்களும் கிடையாது.

தொடர் –55

குருவைத் தேடி

உங்களுக்கு அவசரம் என்றால் சொத்துவரி ஒன்றரை லட்சம் பாக்கி உள்ளது. நீங்கள் அந்த தொகை யை கட்டிவிட்டு கடையை திறந்து கொள்ளுங்கள். வாடகையில் கழித்துக் கொள்வோம் என்றார். கடை முதலாளி.

ஒருவாரம் ஆகுமா? எந்த ஊரில் இருக்கின்றீர்கள் என்று கேட்டேன். அவர்கூறினார்,நான் குடும்பத்துடன் "சீரடி"யில் இருக்கிறேன்.

அவர் சீரடியில் இருக்கின்றேன் என்று கூறியதும் எனக்குள் ஏதேதோ மாற்றங்கள். என்னது எங்கே போனா லும் பாபா நம்மை விட மாட்டேன் என்கிறாறே, என்றவாறு புலம்பியபடி ஒரு வழியாக பணத்தை கட்டிவிட்டு கடையைத் திறந்தேன்.

கடையைத் திறந்து பார்க் கின்றேன். கல்லாபெட்டிக்கு மேல் ஒரு புதிய பாபாவின் படம் பிரேம் போட்டு மாட்டப்பட்டு இருக்கின்றது. எனக்கு சட்டென்று கோபம் வந்து விட்டது. எங்கே போனாலும் பாபா, பாபா, இதை யார் இங்கு மாட்டியது என்று சத்தமிட்டேன். கடையின் மேஸ்திரி ஓடிவந்து நான் தான் சார் மாட்டினேன்.

யாரோ ராமதாஸ் சுவாமிகள்னு உங்களுக்கு தெரிஞ்சவர்னு சொன் னார். அவர்தான் கொடுத்து துட்டுப் போனார். சாமி படம்னு நான் தான் சார் மாட்டினேன்.

இராமதாஸ் சுவாமியா? நான் ஏதோ ஒரு குழப்பத்தில் மேஸ்திரியை முறைத்துப்பார்த்தேன். அவர் உடனே, வேண்டாம்னா கழட்டி விடுகிறேன் சார் என்றவாறே போட்டோவை கழற்றப் போனார். நான் சட்டென வேணாம், வேணாம், இருக்கட்டும் என்றேன்.

பாபா வந்த நேரம் நமது கடையில் வியாபாரம் நல்ல விதமாக நடந்தால் சரி என்று நினைத்துக் கொண்டேன். ஆனால் அவர் என் கடையை சரிபண்ண வரவில்லை. அவர் என்னை சரிபண்ண வந்திருக்கின்றார் என்பதை அப்போதும் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

அடுத்து வந்த ஒரு மாதம் சோத



னையின் உச்சக்கட்டமாக இருந்தது. வியாபாரம் சுத்தமாக இல்லை. நடக்கின்ற வியாபாரமும் நஷ்டத்தில் நடந்தது. கடன் மேல் கடன். சரியாக தூக்கம் இல்லை. சாப்பாடு இல்லை. யாரைப் பார்த்தாலும் கோபத்தில் எரிந்து விழுகிறேன்.

என் நிலையை ஒருவாறு ஊகித் தறிந்த என் மனைவி என்னிடம் மெது வாகப் பேச்சுக் கொடுத்தாள். பணம், பணம்னு உங்க நிம்மதியை கெடுத்துக்கறீங்க!

நமக்கு இந்த தொழில் எல்லாம் சரியாக வராது. நீங்க இந்த தொழிலை விட்டுங்க. நான் பசங்களுக்கு டியூசன் எடுக்கறேன். நீங்க பழையபடி தியானம் சொல்லிக்கொடுங்கள். அந்த வருமானமே நமக்குப் போதும். எதற்கும் நீங்கள் ஒருமுறை சீரடிக்குப் போய் வாருங்கள். பாபா நல்ல வழியைக் காட்டுவார் என்று அடிக்கடி கூற ஆரம்பித்தார்கள்.

அன்றிரவு புதுவருடம் பிறக்கின்றது. நான் இரவு ஒரு மணிக்கு எழுந்து கடைக்குச் செல்கிறேன். அண்ணாநகர் ரவுண்டான அருகில் செல்லும்போது, எனது பின்புறம் கார் ஒன்று மெதுவாக

வந்து கொண்டிருக்கின்றது. நான் சாலையின் ஓரத்தில் மெதுவாக வண்டியை ஓட்டிச்சென்று கொண் டிருக்கின்றேன். திடீரென்று வண்டியில் இருந்த இளைஞர்கள் என்மீது ஐஸ் வாட்டரை ஊற்றிவிட்டு, என்னைப் பார்த்து ஹேப்பி நியூ இயர் என்று கத்திக்கொண்டு செல்கின்றனர்.

மார்கழி மாதத்துக் குளிரில் ஐஸ் வாட்டர் என் மேல் பட்டதும் எனக்கு ஒன்றும் புரியவில்லை. கோபம் தலைக்கேற வண்டியை நிறுத்திவிட்டு, காரில் செல்பவர்களை திட்டுவதற்கு முயற்சிக்கையில் என்னையறியாமல் "பாபா" என்று கத்துகிறேன். என் வாயில் இருந்து அப்போதுதான் பாபா என்ற சொல் வெளிவருகின்றது. அது எனக்கே மிகுந்த ஆச்சர்யமாக இருந்தது. அதைவிட ஆச்சர்யம் என் கண்முன்னே நிகழ்ந்தது.

ரவுண்டானாவில் இரவுக் காவலில் இருந்த காவலர்கள், எனது பாபா என்ற குரலைக் கேட்டு, எனக்கு முன்னால் சென்ற காரை மடக்க முயற்சித்த போது

அந்தக்கார் தலைகீழாக கவிழ்ந் தது. காவலர்கள் ஓடிவந்து காரில் இருந்தவர்களை வெளியில் எடுத்தனர். அதில் நான்கு ஆண்களும் இரண்டு பெண்களும் மது போதையில் இருந் ததை கண்டு அவர்களை எச்சரித்து காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர்.

எனக்கு தீமை செய்தவர்கள்மீது நான் கோபம் கொண்டு அவர்களுடன் சண்டையிடாமல், என்னையறியாமல் என் வாயில் இருந்து பாபா என்று கூற வைத்து அவர்களுக்குண்டான தண்டனையையும் உடனடியாக பெற வைத்தது பாபாவா? அப்படியானால் நமது பிரச்சனைகளுக்கு பாபாவிடம் உதவி கேட்டால் உடனே கிடைக்குமா? என்றெல்லாம் பலவாறாக சிந்திக்க வைத்தது அன்று நடந்த நிகழ்வு.

இது நடந்து அடுத்த வாரத்தில் ஒரு நாள் வியாபார நிமித்தமாக மதுரை சென்று திரும்புகிறேன். சென்னையில் சரியான மழை. அதிகாலை நேரம் கோயம்பேடு பேரூந்து நிறுத்தத்தில் இறங்கி எனது வண்டியை வாகன நிறுத்தத்தில் இருந்து எடுப்பதற்காக பேரூந்து நிறுத்தத்தின் முன்பக்கத்திற்கு



செல்ல நடந்து வருகின்றேன்.

பேரூந்து நிறுத்தத்தில் அப்போது மெட்ரோ ரெயில் வேலைகள் நடந்து கொண்டிருப்பதால் ஆங்காங்கே குழிகள் வெட்டி வைத்திருக்கின்றனர். மழை நீர் ஆறாக ஓடி குழிகளை மறைத்து விட்டது. நான் எனது இரு கைகளிலும் இரண்டு பைகளை பிடித்தபடி வேகமாக ஒரு தடுப்பில் ஏறி மறுபக்கம் தரை என்று நினைத்து குதித்து விட்டேன். அங்கே ஆழமான ஒரு குழியை தண்ணீர் மறைத்திருப்பது எனக்கு தெரியாது.

நான் குதித்த வேகத்தில் என் உடல் முழுவதும் தண்ணீருக்குள் முழுக நான் அப்போதும் என்னையறியாமல் "பாபா" என்று கத்துகிறேன். இம்முறை வேறு விதமான ஒரு அதிசயத்தை உணர்ந்தேன். நான் கத்திய மறுவிநாடி அந்த பள்ளத்தில் இருந்து என்னை யாரோ வெளியில் தூக்கி நிறுத்தியதைப் போன்று உணர்ந்தேன். என் உடல் முழுவதும் தண்ணீர் சொட்ட இரண்டு கைகளிலும் பைகளோடு எந்த காயமும் இன்றி நான் உயரமானதொரு மேட்டில் நிற்கின்றேன்.

இந்நிகழ்ச்சியைக் கண்ட என் பின்னால் வந்த பயணிகளும், இது எப்படி சாத்தியம் என்று ஆச்சர்யத்தில் என்னையே பார்த்துக் கொண்டிருந்தனர். இரு கைகளிலும், இரண்டு பெரிய பைகளுடன் குழிக்குள் விழுந்த நான் அடுத்த விநாடி அப்படியே குழிக்குள் இருந்து எழுந்து நிற்பதைப் பார்த்த பயணிகள் என்னை பேயைப் பார்ப்பதுபோல் பார்த்துச் சென்றனர்.

எப்படியோ ஒரு வழியாக எனது மனதிற்குள் பாபா வந்து விட்டார் என்றே கூற வேண்டும். இந்நிகழ்விற்கு பின்பு, எப்போது பார்த்தாலும் மனம் பாபாவைப் பற்றியே சிந்தித்தது. எனக்குள் இருந்த நெருப்பு தகிக்க ஆரம்பித்தது. அடுத்து வந்த நாட்களில் எனக்கு எதன் மீதும் பிடிமானம் இல்லாமல் போனது. மனம் பாபா, பாபா, என்றே அரற்றியது. திடீரென்று சில நேரங்களில் எனக்குள் இருந்த தமிழ் பற்று, பாபா மராட்டியர், நானோ தமிழ் சித்தர்கள் வழிபாட்டை கடைபிடிப்பவன். நமக்குள் எப்படி ஒத்துப் போகும். என்றெல்லாம் சிந்திக்க ஆரம்பித்தது.

பாபா மதம், இனம், மொழி அனைத்தையும் கடந்தவர் என்பதை பின்னாளில் எனக்குப் புரிய வைத்தார். அதை பின்பு கூறுகின்றேன். சதாசர்வ காலமும் பாபாவின் சிந்தனைகள் எனக்குள் அவரைப் பற்றி மேலும் அறிந்து கொள்ள வேண்டும் என்று தூண்ட, நான் மயிலாப்பூர் சாயிபாபா ஆலயம் சென்று பாபாவைப்பற்றி வர லாறு கிடைக்குமா என்று தேடினேன்.

அங்குதான் முதன் முதலாக "சாயி சத்சரிதம்" என்ற புத்தகம் இருப் பதை அறிந்து அதை வாங்கிவந்து படிக்க ஆரம்பித்தேன். ஆயினும் என்னவோ என்னால் தொடர்ந்து படிக்க முடியவில்லை. நான் ஏற்கனவே பெற்றிருந்த தவக்கல்வி என்னால் பாடங்களை படிப்பதையும், கதைகளை கேட்பதையும் ஏற்றுக்கொள்ள மறுத்தது. உண்மையான அனுபவத்தை நாடியது. நான் என் சற்குருவிற்காக ஏங்கித் தவித்தேன்.

நீயே என் சற்குருவானால் எனக்கு ஏற்பட்டிருக்கும் சந்தேகங்களை தீர்த்து வைத்து என்னை ஆட்கொள்வாயாக! என்று பிரார்த்தித்தேன்.

பாபாவை நான் முழுமையாக நம்புவதற்குண்டான சம்பவம் ஒன்று விரைவிலேயே நடந்தது. ஆம் அது என் குழப்பங்களுக்கெல்லாம் தீர்வாகவும் அமைந்தது.

அது ஒரு சனவரி மாதத்து கடைசி ஞாயிற்றுக்கிழமை. நஷ்டமடையும் வியாபாரத்தை எப்படியாவது மீட்டுக் கொள்ள வேண்டும் என்று மிகவும் சிரமப்பட்டு சேட் ஒருவரிடம் தின வட்டிக்கு இரண்டு லட்சரூபாய் பணத்தை வாங்கி அதை எடுத்துக் கொண்டு இரவு இரண்டு மணிக்கு கடைக்குச் செல்கிறேன். வீட்டில் இருந்து புறப்பட்ட இரண்டாவது கிலோ மீட்டரில் சற்றே இருட்டான பகுதியில் செல்லும் போது இரண்டு மர்ம நபர்கள் என்னை வழிமறிக்கின்றனர்.

இரண்டு நபர்களின் கைகளிலும் கத்தி பளபளக்கின்றன. நான் திரும்பி தெருவைப் பார்க்கின்றேன். ஒருவரும் இல்லை. சரியாக மாட்டிக்கொண்டோம் என்றவாறே வண்டியில் இருந்து இறங்கி தனியாக நிற்கிறேன். ஒருவன் ஓடிவந்து என்னருகில் நின்று கொண்டான். மற்றொருவன் என் வண்டியில் இருந்த பணப்பையை எடுத்துக் கொண்டு அவனது கூட்டாளிக்கு சைகை செய்ய இருவரும் ஓடுகின்றார்கள்.

கணநேரம்தான் எனது இரண்டு லட்சரூபாய் பறிபோனது. என்னால் எதுவும் செய்ய முடியவில்லை. கத்தகூட வாய் வரவில்லை. என்னுடைய கடைசி நம்பிக்கையான இந்த தொகை என்னை விட்டுப் போய்விட்டது. இனி நான் என்ன செய்வேன். கைகளைப் பிசைந்து கொண்டு நட்டநடு ராத்திரியில், நடு ரோட்டில் நிற்கின்றேன்.

என் பணப் பையை தூக்கிக் கொண்டு என் கண்முன்னால் ஓடுபவர் களை என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. நான் ஏற்கனவே ஆயிரம் கடவுள்களை நம்புகிறேன். இப்போது புதிதாக பாபா என்று ஒருவரை நம்ப ஆரம்பித்திருக்கிறேன். இப்போது ஒருவனும் எனக்கு உதவவில்லை. இங்கு ஒருவனும் இல்லை. இருந்தால்தானே உதவுவதற்கு. இனி நான் யாரையும் நம்பப் போவதில்லை. என்றவாறே என் எதிரில் ஓடிக்கொண்டிருப்பவர்களைப் பார்க்கின்றேன்.

சற்றே இருள் சூழ்ந்த அந்த

தெருவில் பண மூட்டையுடன் அவர்கள் ஓடிக்கொண்டிருக்க, திடீரென நூற்றுக்கண்ணகான எருமை மாடுகள் அவர்களை நோக்கி ஓடிவந்து அவர்களை கடந்து ஓடியது. தடதடவென ஓடிவந்த மாடுகளுக் கிடையே அவர்கள் காணாமல் போனார்கள். இரண்டு மூன்று நிமிடங்களுக்குப் பின்பு சற்றே நிசப்பதம்.

நான் சற்று முன்னே சென்று பார்க்கின்றேன். கண்ணுக்கெட்டிய தூரம் வரை பணத்தை பறித்துச் சென்றவர்களைக் காணோம். ஆனால் தூரத்தில் என் பணப்பை மட்டும் அநாதையாக கிடக்கின்றது.

எனக்கு போன உயிர் திரும்பி வந்தது போல் இருந்தது. ஓடிப் போய் பணப் பையை எடுத்து பதட்டத்துடன் பிரித்துப் பார்க்கின்றேன். பையினுள் பணம் இல்லை. அதற்குப் பதில் பாபாவின் புகைப்படங்கள் ஆயிரக்கணக்கில் இருக்கின்றன.

உனக்கு நான் வேண்டுமா? பணம் வேண்டுமா? என்று கேட்பதுபோல் இருந்தது அது. அப்போதைய மனநிலையில் நான் கடன் வாங்கிக் கொண்டுவந்த பணம் தான் எனக்கு முக்கியம். நீ தேவை இல்லை என்பது போல் பாபாவின் புகைப்படங்கள் உள்ளபையைத் தூக்கி தூர எறிந்தேன் பை போய் விழுந்த இடத்தில் ஒரு பிச்சைக்காரர் நின்றிருந்தார்.

அவர் பையை எடுத்துக் கொண்டு என்னை நோக்கி வந்து, அப்போ பாபா தேவையில்லை. உனக்கு பணம் தான் முக்கியம் இல்லையா என்றார். எனக்கு தூக்கிவாரிப்போட்டது. நீங்கள் யார் என்றேன்.

நான் பிச்சைக்காரன் என்றார் அவர். நான் மனதிற்குள் நினைத்து, பாபா படங்களை தூக்கிப் போட்டது இவருக்கு எப்படி தெரியும் என்றெல்லாம் யோசிக்க கூடிய மனநிலையில் நான் இல்லை. கோபமாக "ஆமாம்" என்றேன்.

உடனே அந்தப் பிச்சைக்காரர், என்னருகே வந்து ஆதரவாக, தம்பி அப்படி எல்லாம் கூறாதே! நீ வந்த வேலை என்ன? இப்போது செய்கின்ற வேலை என்ன? நீ செய்கின்ற தவறை எல்லாம் மன்னித்து சற்குருவே உன்னிடம் வருகின்றார். அவரை வேண்டாம் என்று கூறுகிறாய். இதற்காகவா இவ்வளவு பிறவி எடுத்து இளைத்தாய்? பணம் உன்நிலையை உனக்கு மறக்கடித்துவிட்டதா?

கடந்த ஆறு மாதங்களாக உன் உண்மை நிலையியை உனக்கு உணர்த்த எவ்வளவோ சம்பவங்களை உனது வழிகாட்டிகளும், குருநாதர்களும், எடுத்துக்காட்டியும் இன்னமும் நீ லௌகீக விசயங்களிலேயே நம்பிக்கை கொண்டு சற்குருவினை உதாசீனம் செய்கின்றாய். உனக்கு இதுவே இறுதி செய்தியாக இருக்கும்.

இதற்குமேல் நீ எங்களிடம் இருந்து செய்திகளை எதிர்பார்க்காதே! உன் பிறவி நற்கதி அடைய வேண்டுமானால் உனது சற்குருவை தேடி ஓடு. இல்லை என்றால் இதோ உனது பணப்பை. இதையே பிடித்துக் கொண்டு இன்னும் பல பிறவிகள் அல்லல்படு, என்று பணப் பையை என் மேல் எறிந்துவிட்டு திரும்பிப் பார்க்காமல் சென்று விட்டார்.


நான் பையை எடுத்து பிரித்துப் பார்க்க அதில் கட்டுக்கட்டாக பணம் மட்டுமே இருந்தது. பாபாவின் புகைப் படங்களை காணோம்.

- தொடரும்...

பொறுமை !







நம்பிக்கை!!

மூலவர் ஸ்ரீ யோக சயன சாய் (சமாதி)

108 கோடி ஸ்ரீ சாய் 11 உறுதி மொழிகள்

(SRI SAI 11 ASSURANCES)


சொல்லிக்கொண்டே செம்பு முலாம் பூசப்பட்ட தகட்டில் எழுதுங்கள்

அன்புடையீர் வணக்கம்.

108 கோடி ஸ்ரீ சாய் 11 உறுதி மொழிகள் (SRI SAI BABA 11 ASSURANCES) சொல்லிக்கொண்டே செம்பு முலாம் பூசப்பட்ட தகட்டில் எழுதி " ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சிவ சாயி சமேத 1 டன் எடை கொண்ட வெள்ளைகல் (White Stone) ஸ்ரீ திவ்ய சாயி அனுக்கிரஹ யந்திரத்தின் கிழியை சமர்ப்பிக்கும் கூட்டு சாதனை நிகழ்வினைக் துவக்கியுள்ளோம்.

ராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர் அருகில் புலிவலத்தில் ஸ்ரீ யோக சயன சாய் (சமாதி) ஆலயத்தில் பாபா நிகழ்த்தப் போகும் ஒரு மிகப் பெரிய உலக அதிசயம் (SAI INCREDIBLE MIRACLE)

எழுதுங்கள் ! செம்பு முலாம் பூசப்பட்ட தகட்டில் 108 கோடி ஸ்ரீ சாயி 11 வாக்குறுதிகள் (SRI SAIBABA 11 SUTTRAS) 1 டன் எடை கொண்ட வெள்ளைகல் (White Stone) ஸ்ரீ திவ்ய சாய் அனுக்கிரஹ யந்திரத்தின் கிழியை பிரதிஸ்டை செய்யும் மஹா பாக்கியத்தைப் பெறுங்கள்.



ஸ்ரீ சாயி உறுதிமொழிகள்

(SAI 11 EKKADAS SUTTRAS)

எழுதும் செம்பு முலாம் பூசப்பட்ட தகடு

இலவசம்

உங்கள் முகவரியை 8754316316

SMS / Whatapp செய்து பெறவும்

Temple Address

SRI YOGA SAYANA SAI (SAMATHI) TEMPLE

SAI HEALTHLINE FOUNDATION

No.62/2, Kulathu Street, Saipuram, Near Sholingar,
PULIVALAM (Po) Banavaram (Via),
Ranipet Dist. Pin : 632505. Tamil Nadu

Google Pay PhonePe மூலமாகவும் செலுத்தலாம்

8754 316 316

email : shelfoundation1956@gmail.com

தொடர் –19

சாய் சரவணன்

"அதி தேவதை"



சத்தியத்தின் உண்மையான ரூபமே சத்தியமாகும். சத்தியத்திற்கு ஞானம் என்ற பெயர் உண்டு. அந்த ஞானத்தின் ரூபமே சற்குரு ஆவார். சத்தியத்தின் லட்சணம் யாதெனில், மனமும், வாக்கும் ஒன்று பட்டிருப்பதே! மனம் சுத்தமாக இருப்பது வாக்கு. அந்த வாக்கினால், தனக்கும், பிறருக்கும் நன்மை பயக்கும்படி செய்ய வேண்டும்.

ஒருவன் சத்தியம் பேசி பழகிவிட் டால், அவன் எது கூறினாலும் பலித்து விடும். சத்தியத்தில் இருந்துதான் இவ்வுலகம் பிறப்பெடுக்கிறது. அந்த சத்தியத்தி னால்தான் உலகம் இயங்குகிறது. அந்த "சத்தியத்திற்கே சத்தியமாய் இரு" என்பதே ஆன்மீக உபதேசம்.

அந்த மெய்ஞான சத்தியத்தின் வடிவாக மண்ணில் அவதரித்தவர் சமர்த்த ஸ்ரீ சற்குரு சாயிநாதர் ஆவார். நம் இராதாகிருஷ்ணமாயி ஸ்ரீ சாயிநாதரையே சர்வமுமாக ஏற்றுக்கொண்டு பக்தி செய்து சத்தியத் திற்கே சத்தியமாக விளங்கினாள்.

ஸ்ரீ சற்குருவிடம் பக்தி செய்வதை குரு கீதை இவ்வாறு விளக்குகின்றது.

எவருக்கு தெய்வத்திடம் உயர்ந்த பக்தி இருக்கின்றதோ, அந்த தெய்வத்திடம் காட்டும் உயர்ந்த பக்தியைப் போலவே, சற்குருவிடமும் எவர் பக்தியை காட்டுகின்றாரோ அவருக்கே, ஞானத்தின் அர்த்தங்கள் புரியும் என்கிறார் பரமேஸ்வரன்.

குருகீதையில் கூறியதைப் போலவே உண்மையில் சற்குருவிடம் பக்தி பூண்டு குருசேவையில் திறம்படத் திகழ்ந்தது, ஸ்ரீ இராதாகிருஷ்ண மாயியே! தன் பிரேம பக்தியால் சீரடியில் பலரையும் குருசேவையை செய்ய வைத்து சாயிநாதரின் அருளுக்கு பாத்திரம் ஆகும்படி செய்தது நம் அன்னையே!

பகவானின் திருவடியை அடைந்த எவரும், பகவான் சங்கல்பித்தால் பகவானின் லீலைக்காக பக்தன் மீண்டும் பிறவி எடுப்பான். ஆனால் சற்குருவின் திருவடியோடு கலந்த எந்த ஒரு சீவனும் மீண்டும் இம்மண்ணில் பிறவி எடுக்காது என்பதே சத்தியமாகும். அப்பேற்பட்ட திருவடி நம் சாயிநாதருடையதாகும்.

அந்த திருவடி சீரடி மண்ணில் நோக

கூடாது என்பதற்காக, நம் அன்னை தன் நித்ய சேவைகளில், சீரடியின் தெருக்களையும், பாதைகளையும், நித்தமும் பெருக்கி சுத்தமாக வைத்துக் கொள்வாள். அவ்விதம் தன் குருபக்தியை வெளிக்காட்டினாள் அன்னை. ஆனால், சீரடி மக்கள் பாபாவை, அதிசயங்கள் செய்யும் சித்தராகவும், பிச்சை எடுத்து வாழ்க்கை நடத்தும் ஒரு பக்கீராகவும் தான் பார்த்தார்கள்.

அதிகாலையிலேயே தன் கடமைகளை முடித்த அன்னை, பின்னர் தன் பிள்ளை யான அப்துல்லாவை தட்டி எழுப்பினாள். தூக்க கலக்கத்துடன் அப்துல் எழுந்து கொண்டு அன்னையைப் பார்த்தான். அன்னை கூறினாள், "அப்துல், நாம் வாழும் வாழ்க்கை நமக்கு இறைவன் தந்தது. ஆதலால் அவனுக்கு நன்றி செலுத்து. இனிமேல் நீ அதிகமாக தூங்கக்கூடாது. குறைந்த அளவே உணவை உட்கொள்ள வேண்டும். அப்படி செய்தால், விரைவில் இறையருள் கிட்டி சற்குருவின் அருளைப் பெறலாம் என்றாள்.

அப்துல் உடனே எழுந்து காலை கடன்களை முடித்துக் கொண்டு தன் அன்றாடம் செய்யும் நித்ய சேவையை செய்வதற்கு சாயி இருக்கும் சாவடியை நோக்கிப் புறப்பட்டான். அப்துல் சாவடிக்குச் சென்று சாயிநாதரிடம் ஆசி வாங்கினான். அப்போது சாயி அப்துல்லாவை நோக்கி, "அப்துல் குறைவாக சாப்பிடு, குறைவாக தூங்கு" என்றார்.

அப்துல்லாவிற்கு உடனே அன்னையின் ஞாபகம்தான் வந்தது. சாயியின் வாக்கும், அன்னையின் வாக்கும் ஒன்றாக இருப்பதை எண்ணிக்கொண்டே தன் சேவைகளை செய் ஆரம்பித்தான்.

அதே நேரம், மகல்சாபதி, தாத்யா, சியாமா, போன்ற சில அடியவர்கள் சாவடியில் இருக்கும் பாபாவை வணங்கி, துவாரகாமாயிக்கு அழைத்துச் சென்றனர். அங்கே சென்ற அனைவருக்கும் ஆச்சர்யம் காத்திருந்தது. மசூதியின் தரைகள் சுத்தம் செய்யப்பட்டு, சாணியால் மெழுகி, வண்ணக்கோலங்கள் போடப்பட்டிருந்தன. அப்போது சியாமா ஆச்சர்யத்துடன், யார் இப்படி செய்தார்கள். மசூதியை இதற்கு முன் இவ்வளவு சுத்தமாக நான் கண்டதில்லையே என்றார்.

அங்கே இருந்த பாபாவின் பக்தர்கள் அனைவரும் வாய் மூடி மவுனமாக இருக்கவே, பாபாவே தன் வாயால், வேறு யார் செய்திருப்பார்கள் இராமகிருஷ்ணியைத் தவிர என்று கூறிவிட்டு, துனியின் அருகே அமர்ந்து பக்தர்களுக்கு உதிப் பிரசாதம் அளித்தார். அதன்பிறகு சிறிது நேரம் கழித்து சியாமா மெதுவாக பாபாவிடம், பாபா, யார் இந்த இராமகிருஷ்ணி. எங்கிருந்து வந்தாள். என்று கேட்டார்.

பாபா கூறினார், "இராமகிருஷ்ணி என் முற்பிறவிகளில் எனக்கு மிகவும் நெருக்கமானவள். ஆனால் சரீர பந்தம் அல்ல, ஆத்ம பந்தமாய் என்னில் உறைந்தவள். என்றார். சியாமாவிற்கு ஒன்றும் புரியவில்லை. பாபாவிடம் விடைபெற்று வீட்டிற்குக் கிளம்பினார். பாபாவும் தன்னுடைய அடியவரான குசால்சந்தை காண்பதற்காக, அருகில் உள்ள ரஹதா என்ற ஊருக்கு நடந்தே புறப்பட்டார்.

இதை அறிந்த அன்னை,சாயிநாதரை வழியனுப்ப, பிருந்தாவனத்தில் இருந்து ஓடி வந்து மகராஜ், மகராஜ், என்ற வண்ணம் அழைத்துக் கொண்டே ஊரில் எல்லை வரை சென்று வழியனுப்பிவிட்டு



திரும்புவாள். இப்பேர்பட்ட அன்னையின் பிரேம பக்தியை உணராத ஒரு சில மக்கள், அன்னையின்மீது வெறுப்பைக் காட்டி பொறாமை கொண்டனர்.

சாயிநாதரின் அன்பை தான் மட்டுமே பெற வேண்டும். சாயிநாதர் தனக்கு மட்டுமே சொந்தமாக இருக்க வேண்டும் என்று நடிக்கின்றாள். பக்தியின் மயக்கத்தால் மகராஜ், மகராஜ் என்று அழைத்து சாயியை திசை திருப்பப் பாரக்கின்றாள். என்று அன்னையின் காதுபடவே பேசிக் கொண்டார்கள்.

இம்மாதிரியான பேச்சுக்களை அன்னை பொருட்டாகவே எடுத்துக் கொள்ள மாட்டாள். அவளது ஞான நிலையை உணராத மக்கள் பல முறை அவள் செய்யும் காரியங்களில் குறிக்கிட்டு குறை கூறுவார்கள். ஆயி அனைத்தையும் காதில் வாங்காமல், தன் லட்சியத்தை நோக்கி பயணம் செய்த வண்ணமே இருந்தாள்.

ரஹதாவில் இருந்து சாயி வருகிறார் என்று கேள்விப்பட்டால் போதும். பாபாவை வரவேற்க ஒரு லாந்தர் விளக்கோடு வந்து ஊர் எல்லையில் நின்று விடுவாள். அதுவும் நித்யப்படியே நடந்து வந்தது. சாயி லெண்டி தோட்டத்திற்கு செல்வதைக் கண்டால் அவரின் பின்னாலேயே குருமகராஜ் என்று மெல்லிய குரலில் பாடிக்கொண்டே செல்வாள்.

இரவு நேரங்களில், துவாரகாமாயியில் பாபாவின் முன்னால் தன்னை மறந்த நிலையில் சாயியின் மீது பாடல்களை பாடி மகிழ்வாள். சில சமயங்களில் சமாதி நிலைக்குப் போய் மயங்கி விழுவாள். பக்தர்கள் அவளை எழுப்பிவிட நினைத்தால் சாயி, வேண்டாம் அவளே எழுந்து கொள்வாள் எனக்கூறுவார்.

பின்னர் அவளாகவே விழிப்பு வந்த உடன் எழுந்து சாயியின் கருணையைப் பெற்று வீடு திரும்புவாள். பாபாவை நாடி வரும் பக்தர்களிடம் பாபாவின் பூஜைக்காக வெள்ளி சாமான்கள் வாங்கித்தர இய லுமா என்று வினவுவாள்.

ஆயியின் உண்மையான சேவையை உணர்ந்த ஒருசிலர் மற்றவர்களிடம் ஆயியைப் பற்றி எடுத்துரைத்தனர். இருப்பினும் யாரும் செவிமடுக்க தயாராக இல்லை. மற்றவர்களிடம் இல்லாத ஞானமும்,பக்தியும், செயல் திறமும் அன்னையிடம் இருப்பதைக் கண்டு பலரும் பொறாமையும், கோபமும் கொண்டனர்.

ஒரு நாள் நானா சாஹேப் சாந்த்தோர்கர் சீரடிக்கு சாயியை தரிசிக்க வந்தார். அப்போது மக்கள் சிலர் நானாவிடம் அன்னையைப்பற்றி வீண் வம்புகளைக் கூறி அவர்களின் கோபதாபங்களை கொட்டித்தீர்தனர். நானாவோ, ஆயியின் குண நலன்களை நன்கறிந்தவர். மக்கள் பேசும் வீண் பேச்சில் இருந்து ஆயியை தப்புவிக்க நேரே சாலாவிற்கு ஆயியை காணச்சென்றார்.

– தொடரும்

ஓம் சாய்ராம்

வாழ்வை வளமாக்கும் இனிய சாயி லிகித ஜயம்

சாய் அன்பர்களுக்கு பணிவான வணக்கத்துடன்...

ப்ரபஞ்சத்தின் ஆற்றல்மிக்க சக்தி ஸ்வரூபனான நம் அன்பு சாய் மஹராஜ் க்ருபையினால் நமக்கு அளிக்கப்பட்ட திரு மந்த்ரமான,

"ஓம் ஸ்ரீ சாய் ராம ஜயம்" என்ற

சக்தி வாய்ந்த லிகித நாம ஜபம் தினமும் 108 முறை யாவது மனம் ஒன்றி எழுதி நமது கர்ம வினைகளின் தாக்கத்தில் இருந்து, தற்காப்பு செய்து கொள்வதுடன், நமது அனைத்து காரியங்களிலும், பேரொளியாய் சாய்நாதர் வழி காட்டி, பரிபூரணமாய் நம்மை ஆசீர்வதிக்க ப்ரார்த்திப்போம் வாரீர்.



'லிகித நாம ஜபம் மனித குலத்திற்கு மாமருந்து'

தொடர்புக்கு;

சுந்தர்சாய், செல்: 9789404451

சமயக்குரவோன் சுந்தர நாயனார்..!

திருமுனைப்பாடி நாட்டிலுள்ள திருநாவலூர் எனும் ஊரில் சடையனார் இசைஞானியார் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார் சுந்தரர். இவர் ஆதி சைவர் குலத்தினைச் சேர்ந்தவர். இவரது இயற்பெயர் "நம்பியாரூரன்". இவரை "ஆரூரன்" என்றும் அழைப்பர்.

இவருடைய அழகினைக் கண்டு சிவபெருமானே "சுந்தரர்" என்று அழைத்தமையால், அப்பெயரே இவருக்கு நிலைத்தது. இவர் பூர்வத்தில் சிவபெருமானின் நண்பராகக் கைலாயத் தில்"ஆலால சுந்தரர்" என்ற பெயரில் இருந்தாகக் கூறுவர்.

சுந்தரரைத் திருமுனைப்பாடி அரசர் நரசிங்கமுனையரையர், பெற்றோரின் சம்மதத்துடன், தனது தத்துப் பிள்ளை யாக ஏற்றார். பேரழகனான சுந்தரரை, அரண்மனைக்கு அழைத்துச் சென்று இளவரசனைப் போல அனைத்துக் கலைகளையும் கற்றுத் தந்து வளர்த்தார் மன்னர். எந்நேரமும் ஆபரணங்களும், மலர் மாலைகளையும் சூடிக் கொண்டு இளவரசரைப் போலவே வாழ்ந்து வந்தார் சுந்தரர்.

இவர் மணப்பருவம் அடைந்தபோது புத்தூரில் உள்ள சடங்கவி சிவாச்சாரி யாரின் மகளை திருமணம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. மணநாளன்று



முதியவர் ஒருவர் வடிவில் அங்கு வந்த சிவபெருமான், சுந்தரருடைய பாட்டனார் எழுதிக் கொடுத்ததாகச் சொல்லப்பட்ட ஒரு ஓலையைக் காட்டிச் 'சுந்தரரும், அவரது வழித்தோன் றல் களும் தனக்கு அடிமை' என்றார்.

இவன் பித்தனா? எனச் சுந்தரர், வந்தவரைத் திட்டினார். பின்னர் 'சுந்தரர் தனக்கு அடிமையே' என கிராம தலைவர்களின் முன்னர் நிரூபித்து, திருமணத்தை நிறுத்தி, சுந்தரரை அழைத்துக்கொண்டு திருவெண்

ணைநல்லூர் கோயிலினுள் நுழைந்த வயோதிகர், கருவறைக்குள் சென்று மறைந்தார்.

இறைவனே வந்து தன்னைத் தடுத்தாட் கொண்டதை உணர்ந்தார் சுந்தரர். அவருக்குக் காட்சிக் கொடுத்தச் சிவபெருமான், நீ என்னைத் திட்டிய "பித்தா" என்பதையே முதற் சொல்லாகக் கொண்டு பாடும் படி கூறினார் எனவே ."பித்தா பிறை சூடி" என்ற தமது முதல் தேவாரப் பதிகத் தைப் பாடிச் சிவனாரைத் துதித்தார் சுந்தரர்.



இவரது பாடல்களில் சிவபெருமானைத் தன் நண்பரைப் போல உரிமையோடு பக்திப் பண்ணும் பாங்கைக் காணலாம். இவர் சிவத் தலங்கள் தோறும் சென்று தேவாரப் பதிகங்கள் பாடி இறைவனைப் பணிந்தார். இறைவன் பால் இவர் கொண்டிருந்த பக்தி "சக மார்க்கம்" என்ற 'தோழமை வழியைச் சார்ந்தது.

இறைவனைத் தமது தோழனாகக் கருதி, உரிமையோடு தமக்குத் தேவையானவற்றை எல்லாம் கேட்டுப் பெற்றுக்கொண்டார் சுந்தரர். "நீள நினைந்தடியேன்" என்று தொடங்கும் அவர் பாடிய தேவாரப் பதிகம் மூலம், குண்டலூரில் தான் பெற்ற நெல்லை தனது ஊர் கொண்டு சேர்க்க இறைவனிடம் உதவி கேட்டார் சுந்தரர்.

திருவாரூரில் பதியிலார் மரபைச் சேர்ந்தப் "பரவையார்" என்ற பெண்ணை மணந்து மகிழ்வோடு வாழ்ந்திருந்தார் சுந்தரர். சில காலத்திற்குப் பின்பு திருவொற் றியூருக்கு வந்தவர், அங்கு 'ஞாயிறு' என்ற ஊரில் வேளாளர் ஒருவரின் மகளான "சங்கிலியார்" எனும் அழகிய பெண்ணைக் கண்டு காதல் கொண்டார்.

சுந்தரரின் நண்பனான சிவ பெருமான் அவருக்காகத் தூது சென்று, திருமணத்தினை நடத்திவைத்தார். அரசரான சேரமான் பெருமான் இவருடைய நண்பர். சேரமான் பெருமானை இவர் சந்தித்து திரும் பும் போது, அம்மன்னர் பொன், பொருள்,மணியிழைகள், ஆடைகள் போன்ற பல பொருட்களையும் இவருடன் அனுப்பி வைத்தார்.

திருமுருகன்பூண்டி என்ற ஊரில் இறைவன் அவற்றை எல்லாம் தமது பூதகணங்களை வேடர்களாக மாற்றி அவர்களைக் கொண்டு பறித்துக் கொண்டார். சுந்தரர் 'கொடுகு வெஞ் சிலை வடுகவேடுவர்.' எனத்துவங்கும் பதிகம் பாடி இறைவனிடம் இருந்து பொருட்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டார்.

சிவபெருமானிடம் முரட்டுத்



தனமான அன்பைக் காட்டியவர் சுந்தரர். எனவே இவரை" வன்தொண்டர்" என்பர் இவ்வாறு இறைவனை ஏவலாளாக வைத்திருப்பதை பொருக்காமல் "ஏயர்கோன் கலிகாமர்" என்ற நாயனார் சுந்தரரின் மேல் கடுங்கோபம் கொண்டார். சுந்தரர் மீது கொண்ட கலிகாமரின் வெறுப்பைப் போக்கச் சிவபெருமான் திருவுள்ளம் கொண்டார்; எனவே கலிகாமருக்குச் சூலை நோயைக் கொடுத்தார் .

தன் தவறை உணர்ந்த கலிகாமர் இறைவனிடம் தவறுக்காய் இறைஞ்ச, நம்பிஆரூரான் வந்து உனது நோயைத் தீர்ப்பான்! என்றார் சிவபெருமான்.

இறைவனையே வேலை வாங்கிய அந்த வன்தொண்டன் வந்து என் நோயைத் தீர்ப்பதைவிட, நான் உயிர் துறப்பேன்! எனத் தனது வயிற்றை வாளால் கீறிக்கொண்டு உயிர் துறந்தார்! கலிகாமர்.

சுந்தரர் வந்து அந்நிலையைக் கண்டு, வருந்தி, தானும் உயிரைவிட. வாளைக் கையிலெடுத்தார். அப்பொழுது சிவபெருமான் அருளால், கலிகாமர் உயிர் பெற்றெழுந்து, சுந்தரரைத் தழுவிக் கொண்டார். இந்த அற்புதத்தைக் கண்டு தேவர்கள் மலர்மாரி பொழிந்தனர். இருவரும் பின்னர் நண்பர்களாயினர்.

சிவபெருமானுக்கே தோழன் என்பதனால் "தம்பிரான் தோழன்" என்றழைக்கப்பட்ட சுந்தரர், சேரமான் பெருமானோடு இணைந்து பல சிவதலங்களையும் தரிசித்தார்; அவரது சிறந்தத் தோழனாகவும் இருந்தார் சுந்தரர். இறுதியில் சுந்தரர், தனியே திருவஞ்சைக் களத்தை அடைந்து 'என் மணவாழ்வை அறுத்திட்டு, நும் திருவடியிலேயே அடியேனைச் சேர்த்தருள வேண்டும்!' எனத் "தலைக்குத் தலைமாலை" என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடினார்.

அப்பொழுது கைலாயத்திலிருந்து, வெள்ளையானையைச் சிவபெருமான் அனுப்பி வைக்க, அதிலேறி கைலாயத்திற்குப் புறப்பட்டார்! சுந்தரர்.

தன் நண்பனான சேரமான்பெருமாள் நாயனாரை நினைத்தவாறே சென்றார் சுந்தரர். அப்பொழுது அதை உணர்ந்தச் சேரமான் பெருமான் நாயனாரும், தனது குதிரையிலேறி சிவனாரின்

ஐந்தெழுத்து மந்திரத்தை ஓத, அக்குதிரை விண்ணில் பறந்து சென்று, சுந்தரரின் வெள்ளை யானையின் முன் நின்றது.

பின்னர் இருவரும் கைலா யத்தை அடைந்து சிவபெருமானின் தாளினை வணங்கினர். சேரமான் பெருமான் நாயனார், தான் பாடிய, "திருக்கைலாய ஞான உலா" என்ற பிரபந்தத்தைச் (நூல்) சிவனாரின் முன் பாடினார். தம்பிரான் தோழனான சுந்தரர், மீண்டும் சிவபெருமானுக்குத் தோழராகிச் சிவானந்த வெள்ளத்தில் மூழ்கினார்.

சுந்தரர் பாடிய தேவாரங்கள் 7 ஆம் திருமுறையில் சேர்க்கப் பட்டுள்ளன. இவர் இயற்றிய திருத்தொண்டத் தொகை என்னும் நூலில் 60 சிவனடியார்கள் பற்றி யும், 9 தொகை அடியார்கள் பற்றியும் குறிப்புகள் உள்ளன. இந்நூலின் துணை கொண்டே சேக்கிழார் பெரியபுராணம் எனும் நூலை இயற்றினார்.

அதில் சுந்தர மூர்த்தி நாயனாரையும், அவரது பெற் றோர்களான சடையனார், இசை ஞானி யார் ஆகிய மூவரையும் இணைத்து சிவதொண்டர்களின் எண்ணிக்கையை 63 எனக் கையாண்டார். இறைவன் மீது பல தலங்களுக்குச் சென்று. சுந்தரர் பாடியுள்ளார். இவரது பாடல்களை "திருப்பாட்டு" என்பர். திருப்பாட்டினை "சுந்தரர் தேவாரம்" என்றும் அழைப்பர்.

சுந்தரரையும், சேரமான் பெருமாள் நாயனாரையும், தனது சிவகணநாதர் களுக்குத் தலைவர்களாக இருக்கும்படி அருள் புரிந்தார் சிவபெருமான்.

சுந்தரமூர்த்தி நாயனாருக்கு ஒவ்



வொரு ஆண்டும் ஆடி மாதம் சுவாதி நட்சத்திரத்தில் குருபூசை சிவாலயங்களில் கொண்டாடப் படுகிறது.

இவர் சிவபெருமான் மீது பாடிய பாடல்கள் 38,000 என்று கூறுகின்றனர். இவை பண்களோடு அமைந்துள்ளன. அதனால், பண் சுமந்த பாடல்கள் என்றும் கூறுகின்றனர்.

இவற்றில் 100 பதிகங்கள் கிடைத்துள்ளன. அவற்றில் 17 பண்கள் இடம்பெற்றுள்ளன. தேவாரங்களில், 'செந்துருத்திப் பண்' கொண்டு பாடல் பாடியவர் இவரே. தேவாரங்களைப் பாடிய மற்ற ஞானசம்பந்தரும், நாவுக்கரசரும் இந்தப் பண்ணில் பாடல்களைப் பாடவில்லை.

ஓம் நமசிவாய
திருச்சிற்றம்பலம்.

– அகஸ்டின்

சாய் தியானாலயாவின் 9-வது சீரடி புனித யாத்திரை




சாய் தியானாலயாவின் சார்பில் 9வது சீரடி புனித யாத்திரை கடந்த 18.1.23 புதன் அன்று, இதழின் ஆசிரியரும், நமது குருவுமான திரு.ஸ்ரீராம் சாய் அவர்களின் தலைமையில் 25 நபர்களுடன் மிகச்சிறப்பாக நடைபெற்று நிறைவடைந்தது.

பக்தர்கள் அனைவரும் காலை 8 மணிக்கெல்லாம் சென்னை மத்திய இரயில் நிலையத்திற்கு வந்து விட்டனர். பக்தர்கள் கோவை, திண்டுக்கல், மதுரை, அவிநாசி, சென்னையிலிருந்த வந்திருந்ததினால் குரு அவர்கள் அனைவரையும் ஒருவரோடு ஒருவர் அறிமுகப்படுத்தி வைத்தார்.

மேலும், நாம் அனைவரும் பகவான் சாயிநாதரின் தரிசனத்திற்கு புனித யாத்திரை செல்கிறோம். பகவான் சாயிநாதரைத் தவிர வேறு நினைவுகள் நமக்கு வேண்டாம். எனவே வருகின்ற ஆறு நாட்களுக்கு ஒரே குடும்பமாக இணைந்திருப்போம். ஒருவரோடு ஒருவர் விட்டுக் கொடுத்துச் செல்வோம். நம் வாழ்வில் இப்பயணம் மறக்கமுடியாத பயணமாக மாறட்டும் என்று கூறி பயணத்தை தொடங்கினார்.

காலை 10.20 க்கு சாய்நகர் எகஸ்பிரஸில் உறங்கும் வசதியுடன் பதிவு செய்யப்பட்ட பெட்டியில் அமர்ந்து எங்களது புனிதப் பயணம் ஆரம்பம் ஆனது. மறுநாள் காலை 11 மணிக்கு சீரடியை அடைந்த நாங்கள் தயாராக இருந்த வாகனத்தின் மூலம் தங்குமிடத்தை அடைந்தோம்.

தங்குமிடத்தில் மூன்று நபர்களுக்கு ஒரு அறை ஒதுக்கித்தரப்பட்டது.



பயணக்களைப்பு நீங்க குளித்துத் தயாரானோம். மதியம் ஒரு மணிக்கு தமிழக உணவு தயாராக இருந்தது. உணவு அருந்திவிட்டு, சிறிது நேர ஓய்விற்குப் பின் சாயிநாதரின் தரிசனத்திற்கு புறப்பட்டோம்.

அன்று வியாழக்கிழமை என்றாலும் நாங்கள் சென்ற நேரம் கூட்டம் சற்று குறைவாக இருந்தது. ஒரு மணி நேரத்தில் பகவானை கண்குளிர தரிசித்து திரும்பினோம். மாலை ஆறு மணிக்கு அச்சுதானந்த சுவாமிகள் அவர்களை சந்திக்க விரும்பினோம்.

உடனே சுவாமிகள் எங்கள் குழுவினரை சாவடிக்கருகில் சந்தித்து அனைவருக்கும் ஆசி வழங்கினார்கள். குரு ஸ்ரீராம் அவர்கள் சுவாமிகளுக்காக தான் எடுத்துச் சென்றிருந்த திருமதி. மாதங்கி பாலாஜி அவர்கள் எழுதிய சம்பூர்ண ஸ்ரீ பாத ஸ்ரீவல்லப சரிதாம்ருதத்தை சுவாமிகளிடம் கொடுத்து ஆசி பெற்றார்கள்.

அடுத்தநாள் காலை எட்டு மணிக்கு சிற்றுண்டி முடித்துவிட்டு அனைவரும் பிம்பல்வாடி செல்லும் வழியில் இருக்கும் சிவநேசன் சமாதி திருக்கோவிலுக்குச் சென்றோம். குரு அவர்கள் சத்சங்கம் நிகழ்த்தி அனைவருக்கும் தியானப்பயிற்சி அளித்தார்கள். வழக்கம்போல் நோய் உள்ளவர்களை பைரவர் வந்து தன் நாவால் தடவிக்கொடுத்து ஆசிர்வதித்தார்.

12 மணிக்கு அறைக்குத் திரும்பி மதியம் உணவு முடித்து சற்று ஓய்வுக்குப் பின் மாலை 3 மணிக்குப் புறப்பட்டு, துவாரகாமாயி, சாவடி, அப்துல்லா





காட்டேஜ், லட்சுமிபாய், மகல்சாபதி, பாய்யாஜி ஆகியோர்களின் வீடு, கந்தோபா ஆலயம் பாரத்து இரவு 9 மணிக்கு அறைக்குத் திரும்பி உணவருந்திவிட்டு ஓய்வெடுத்துக் கொண்டோம்.

மறுநாள் காலை எட்டு மணிக்கு ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பேரூந்தில் ஏறி, நாசிக் சென்று திரைய கம்பேஸ்வரர், திரிவேணி சங்கமம் (அருணா, வருணா, கோதாவரி நதிகளின் சங்கமம்.) காலாராம், கோராராம், சீதா குகை, முக்திதாம் ஆகியவற்றை தரிசித்து இரவு அறைக்குத் திரும்பினோம்.

மறுநாள் அதிகாலை 5 மணிக்கு மீண்டும் சிவநேசன் சமாதியில் தியானம் செய்துவிட்டு, பகல் 10 மணிக்கு பேரூந்தில் புறப்பட்டு, சகூரி உபாசினி மகராஜ் சமாதி கோவில், சனி சிங்கனாப்பூர், தரிசித்து இரவு பூனா வந்து சேர்ந்தோம்.

அன்று இரவு 10.10 க்கு சென்னை எக்ஸ்பிரஸ் மூலம் அனைவரும் சாயி நாதரின் ஆசியுடன் மறுநாள் மாலை 5 மணிக்கு சென்னை வந்தடைந்தோம்.

நேரம் கிடைக்கும் போதெல்லாம் குரு ஸ்ரீராம் சாய் அவர்கள், சத்சங்கம், யோகா, தியானம் போன்ற பயனுள்ள நிகழ்வுகளை நிகழ்த்தியதும், பக்தர்களின் இல்லறப் பிரச்சனைகளுக்கு தீர்வு கூறி அவர்களது சந்தேகத்தை தீர்த்ததும், பயணத்தை இன்னும் அதிக பயனுள்ளதாக மாற்றியது.

புனிதப்பயணத்தில் கலந்து கொண்ட அனைத்து பக்தர்களும். மிகுந்த திருப்தியுடனும், ஆனந்தத்துடனும், நமது குரு ஸ்ரீராம் சாய் அவர்களுக்கு தமது நன்றியினைக் கூறிக்கொண்டு பிரியாவிடைபெற்றுச் சென்றனர்.

பயணத்தின் போது சிறு சிறு இடையூறுகள் ஏற்பட்டபோதிலும் அவைகளை எல்லாம் எங்களுக்கு பெரும் நன்மைகளாக மாற்றி சிறப்பான தரிசனத்தை தந்து பத்திரமாக இல்லம் கொண்டு சேர்த்த பகவான் சாயிநாதருக்கு என் மனமார்ந்த நன்றியினை கூறி நிறைவு செய்கிறேன்.

குரு வாழ்க!
குருவே சரணம்!

"ஸ்ரீ பாத ராஜம் சரணம் ப்ரபத்யே"

சமர்த்த சத்குரு வீரடி சாய் மஹராஜின் க்ருபையாலும், கலியுக பரிபூரண தத்த அவதாரியான, ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் அனுக்கிரகத்தினாலும், கலியுகத்தில் இருந்து மீண்டும் சத்ய யுகம் உருவாக ஸ்ரீ வல்லபர் மீண்டும் அவதாரம் செய்து, உயிர்கள் அனைத்திற்கும் நல்லருள் பொழிந்திட, சுவாமியின் நாம ஜபம் ஒன்றே முழுமையான பாதுகாப்பு கருவியாகும்.



"திகம்பரா திகம்பரா ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லப திகம்பரா"

"திகம்பரா திகம்பரா ஸ்ரீ சக்ரதத்தாத்ரேயா திகம்பரா"

– எனும் சக்தி வாய்ந்த நேர்மறை ஆற்றலைக் கூட்டும் மாமந்திரத்தை தினமும் "108" முறையாவது ஜபம் செய்து, எதிர்மறை சக்தியின் தாக்கத்தில் இருந்து தற்காப்பு பெற்றிடுவோம் வாருங்கள் நண்பர்களே!

"ஜய ஜய ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபா"

விபரங்களுக்கு; சுந்தர்சாய், 9789404451

தன்னையறிந்த தயாபரன்..



ஸ்ரீ வேணுகோபாலன் என்ற இயற்பெயரை கொண்டவர். இவர், புஷ்பா தங்கதுரை என்ற புணைப் பெயரில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுகதைகள் மற்றும் சுமார் 2 ஆயிரம் நாவல்களை எழுதியுள்ளார். இவரது படைப்புகள் இந்தி உள்ளிட்ட பல மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன.

இவர் நாடகம், சிறுகதை, நாவல், புதினம், திரைக்கதை, தொலைக் காட்சி தொடர்கள் மற்றும் மத, புனித யாத்திரைக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

விஞ்ஞானத்தை ஆராய்ந்து கொண்டே சென்றால் அதன் முடிவு ஆன்மீகமாக இருக்கும். ஆராய்ச்சியின் வேர் ஆன்மீகத்தில் நிறைவடைகிறது. விஞ்ஞானம் கங்கை என்றால் மெய்ஞானம் கங்கோத்ரி. இவை இரண் டையும் ஒருசேர சத்ய சாயியிடம் கண்டு வியந்து எழுதுகிறார்.

பாவை சந்திரன் குங்குமத்தில் பணியாற்றியபோது என்னை புட்ட பர்த்தி போய்வந்து கட்டுரை எழுத சொன்னார். அங்கே போனது பெரிய வாய்ப்பாக இருந்தது. ஹோவர்ட் மர்பட், எழுதிய சத்யசாயிபாபாவைப் பற்றிய "Man of Miracles' என்ற

புத்தகம் உலகமெங்கும் கோடிக்கணக்கில் விற்றது. புட்டபர்த்தி போனபோது, அந்தப் புத்தகத்தை எழுதிய திரு. மர்பட்டைப் பார்க்க நேர்ந்தது. அங்கிருந்த பக்தப் பிரமுகர்கள் என்னை அழைத்துப் போய் ஹோவர்ட் மர்பட்டிடம் நான் பாபாவின் வாழ்க்கையைத் தமிழில் எழுதுவதாக அறிமுகம் செய்தார்கள்.



மர்பட் என்னிடம் "எப்படி எழுதுகிறீர்கள்" என்று கேட்டார். நான் பாபாவைச் சந்தித்தவர் களைப் பேட்டி கண்டு அதை எழுதுகிறேன் என்றேன்.

பிறகு பக்தப் பிரமுகர்கள் என் னையும் மர்பட்டையும் அழைத்துக் கொண்டு பல்கலைக்கழக கட்டி டத்துக்குள் சென்றார்கள். அங்கே வைஸ்சான்சலர் என்ற நிலையில் பாபா தங்கும் அறையையும் எங்க ளுக்குத் திறந்து காட்டினார்கள்.

பாபா உபயோகிக்கும் நாற்காலி முதலியவற்றைத் துணியால் மூடியிருந்தார்கள். அங்குள்ள பெரிய பீரோக்களையும் காட்டினார்கள். அதில் பாபா உண்டாக்கிய பல அற்புத பொருள்களை வைத்திருப் பதாகச் சொன்னார்கள். அவற்றை மிஸ்ஸிங் லிங்க் என்று கூறினார்கள். நான் உடனே விழித்துக் கொண் டேன். அதற்குக் காரணம் இருந்தது.

நான் பாபாவின் வாழ்க்கையை பல நூல்களிலும் ஒழுங்காகப் படித்து வருகிறேன். ஒரு புத்தகம், ஒரு துணுக்கு, ஒரு செய்தி விடாமல் படித்துவிடுவேன். விஞ்ஞானிகளிடம் அவர் பேசுவதையும் குறித்து வைத்திருக்கிறேன்.

பகவந்தம் என்ற இந்திய அரசைச் சேர்ந்த விஞ்ஞானி. பாபாவின் சீடர். அவர் பாபாவிடம் விஞ்ஞான விஷ யமாக அடிக்கடி பேசுவார்.

ஒருமுறை பாபா ஒரு கருங் கல்லை அவரிடம் காண்பித்தார். "இது எப்போது உற்பத்தியாகியிருக்க முடியும்?" என்று கேட்டார். விஞ் ஞானி பகவந்தம் அந்தக் கல்லைப் பார்த்து "லட்சக்கணக்கான வருடங் கள் இருக்கும்" என்று கூறினார்.

சுவாமி "இது எப்போது அழியும்" என்று மீண்டும் கேட்டார். அதற்கும் லட்சக் கணக்கான வருடங்கள் ஆகும் என்று பகவந்தம் கூறினார்.

பாபா அந்தக் கருங்கல்லை எடுத்தார். வாய் பக்கம் வைத்து ஊதினார். உடனே கருங்கல் கற்கண்

டானது. இப்போது பாருங்கள். இது கற்கண்டாகி விட்டதனால் நாம் சாப்பிடலாம் ஆன்ம ஞானத்துக்கு முன்னால் விஞ்ஞானம் நிற்காது என்று அவரிடம் கூறினார்.

அப்போது மிஸ்ஸிங் லிங்க் என்ப தைப் பற்றி பேச்சு வந்தபோது, மனித குரங்கிலிருந்து மனிதன் உற்பத் தியாவதற்கு முன்னால் இன்னொரு பிராணி இருந்திருக்க வேண்டும். அது என்ன என்று தெரியவில்லை என்று விஞ்ஞானிகள் கூறினார்கள்.

உடனே சத்யசாயி,அதைத்தான் மிஸ்ஸிங் லிங்க் என்று கூறினார்கள். அதைப் பார்க்க வேண்டுமா என்ற பாபா உடனே கையை அசைத்து ஒரு பொம்மையை உருவாக்கினார். அது வாலில்லாத மனித குரங்காக இருந்தது.

அதைத்தான் மிஸ்ஸிங் லிங்க் என்று கூறினார்கள். அந்த பொம் மையைப் பார்த்தது எனது பெரிய அதிர்ஷ்டம்.

காலப் பரிமாணமும், ஜீவ ராசிக ளின் பரிணாமமும்,கர்ம பரிமாற்றமும் இறைவன் சத்யசாயி போன்ற மகான்களது பேராற்றலுக்கு உட்பட்டே செயல் புரிகிறது. படைப்பவனுக்கே பிள்ளைகளைத் தெரியும்.

ஆராய்ச்சிகளில் எல்லாம் சிறந்த ஆராய்ச்சி என்பது தன்னைத் தானே மனிதன் ஆராய்ந்து பார்ப்பதே.

"நான் யார்" என்ற மனித ஆராய்ச் சியே புனித ஆராய்ச்சி. அதுவே தன்னோடு சேர்த்து இறைவனையும் தனக்குள்ளே கண்டுணர வழிவகை செய்கிறது.

விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

அன்பான சாயி சொந்தங்களே...உங்களது நிறுவனங்கள், கடைகள், தொடர்பான விளம்பரங்களை பிரசுரித்து பயனடையலாம்.



முழுபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.2000

அரைபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.1000

முன் பின் அட்டை உள்பக்கம் கலர் ரூ.3000

பின் அட்டை கலர் ரூ.4000

தீட்சித் வாடா



பாபா வாழ்ந்த காலத்தில் இருந்த அநேக கட்டிடங்கள் காலப்போக்கில் முழு மாற்றங்கள் அடைந்த நிலையில், இன்றும் பழமை மாறாமல் இருக்கும் கட்டிடம் தீட்சித் வாடா. இது குருஸ்தானுக்கு எதிர்ப்புறம் இருக்கிறது. ஹரி சீத்தாராம் தீட்சித் என்பவரால் 1910ம் ஆண்டு வெளியூரிலிருந்து பாபாவிடம் ஆசிபெற வேண்டி வரும் பக்தர்கள் தங்குவதற்கு வசதியாக, பாபாவின் ஆசி மற்றும் அனுமதியுடன் கட்டப்பட்ட கட்டிடம் இது. ஒரு சிறிய உணவருந்தும் அறையும் உள்ளது. பல பெரிய மனிதர்கள் வந்து தங்கிய இடம். தினமும் மத்திய வேளையில் பாராயணமும் உபந்யாசங்களும் பாபா வாழ்ந்த காலத்தில் இங்கு நடைபெறுவது வாடிக்கையான நிகழ்ச்சி. தற்போது சீரடி சாயி சன்ஸ்தானால் நடத்தப்படும் முதலுதவி மையமும், இரத்த தான மையமும் செயல்படுகிறது.

நந்தா தீபம்

லெண்டி பாகில் உள்ள முக்கியமான இடம் இந்த நந்தா தீபம். வேப்பமரம் மற்றும் அரசமரம் என்று இரண்டு மரங்களுக்கு இடையே எரிந்து கொண்டிருக்கிறது. இந்த அரச மரத்தையும், வேப்பமரத்தையும் பாபா தான் தன் கைகளால் நட்டார்.



அதே போல் இங்கு எரியும் விளக்கும் முதன் முதலாக பாபாவால் ஏற்றி வைக்கப்பட்டது. தன் உதவியாளர் அப்துல் பாபாவிடம் " இது அணைந்து போகாமல் தொடர்ந்து 24 மணி நேரமும் எரிந்து கொண்டிருக்குமாறு பார்த்துக் கொள்வது உன் வேலை" என்று பாபா கூறினார். கிட்டத்தட்ட 120 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து அணையாமல் எரிந்து கொண்டிருக்கிறது. இந்த இரண்டு மரங்களும், விளக்கும் பாபாவின் கை ஸ்பரிசம் பட்டவை என்ற காரணத்தால் மக்களால் புனிதமாகக் கருதப்படுகிறது. பக்தர்கள் இதை மூன்று முறை பிரதிட்சிணம் செய்கிறார்கள்.

புற்றை குணப்படுத்தும் சேப்பங்கிழங்கு

கிழங்குவகைகளுள் அதிகமான மாவுச்சத்தைக் கொண்டவை, சேப்பங்கிழங்குகள் தான், உருளைக் கிழங்கைவிட எளிதில் வேகக்கூடியவை. செரிமானம் ஆகக்கூடியவை. உருளைக் கிழங்கைவிட, இனிப்புச் சுவை அதிகம் கொண்டவை.

சேப்பங்கிழங்கில் வெண்மை, கருமை என இரு நிறவகை உண்டு. ஐரோப்பாவில் 13 வகைகள் உள்ளன.

100 கிராம் சேப்பங்கிழங்கில் கிடைக்கும் கலோரி அளவு 97 ஆகும். அதில் மாவுச்சத்து 21 சதவிகிதமும், புரதம் 15 சதவிகிதமும், ஈரப்பதம் 73 சதவிகிதமும் உள்ளன.

சேப்பங்கிழங்கு வெட்டை நோயைக் குணமாக்கும். ஆண,பெண் மலட்டுத் தன்மையையும் நீக்கும். இரத்த விருத்தியை அதிகரிக்கச் செய்யும். காய்ச்சல் நேரத்திலோ, தொடர்ந்து மருந்து சாப்பிட்டு வரும் காலத்திலோ இக்கிழங்கைச் சாப்பிட்டால் அது மருந்தை முறிக்கும். வாதம், இருமல் ஆகியன உள்ளவர்களும் தவிரிக்க வேண்டிய கிழங்கு இது. மற்றபடி எல்லா வய துக்காரர்களும் நனகு சாப்பிட வேண்டிய கிழங்குகளுள் இதவும் ஒன்றாகும். கண்பார்வைத் திறனை அதிகரிக்கும்.

ஹாவாயிலும் மற்ற பசிபிக் தீவுகளிலும் சேப்பங் கிழங்கும், சேப்பங்கீரையும் முக்கிய உணவாக உள்ளன. தென்அமெரிக்காவில் டாஸீன் என்று இதற்குப் பெயர்.

வேகவைத்த கிழங்கைக்கொண்டு சூப், குழம்பு, கேக் முதலியன தயாரிக்கிறார்கள்.

இக்கிழங்கிலிருந்து குழந்தைகளுக்கான சத்துணவுப் பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன. குழந்தைகளுக்கான மற்ற சத்துணவுப் பொருள்களில் முக்கிய மூலப் பொருளாகவும் இக்கிழங்கு மாவு பயன்படுகிறது. வளரும் குழந்தைகளுக்குத் தேவையான அளவு பாஸ்பரஸ், கால்சியம், இரும்பு, வைட்டமின் 'ஏ', வைட்டமின் 'பி' போன்றவையும் இக்கிழங்கில் அதிக அளவு உள்ளன. இதனால் குழந்தைகள் புத்திக்கூர்மையுள்ளவர்களாய் வளர்கின்றனர்.

மேற்கண்ட நன்மைகளை இக்கிழங்கை வேகவைத்துப் பொரியல் செய்து சாப்பிட்டாலே பெறலாம். சேப்பங்கிழங்கும், கீரையும் சற்றுக் கசப்பாய் இருக்கும். இதைப் போக்கப் புளிசேர்த்துச் சமைக்க வேண்டும்.

கிழங்கைப் போலவே கீரையும் சத்து மிகுந்தது. 100 கிராம் சேப்பங்கீரையில் 56 கலோரி வெப்பம் உடலுக்குக் கிடைக்கிறது. ஆனால், வைட்டமின் 'ஏ', வைட்டமின் 'சி' முதலியவை அதிகமாகவும், மாவுச்சத்து குறை வாகவும்



சேப்பங்கீரையில் உள்ளன.

சேப்பங்கீரையைத் தண்டுடன் சேர்த்துச் சமைத்தால் சத்துகள் அதிக மாய்க் கிடைக்கும். வாடிய கீரையையும் சமைத்துண்ணலாம். இது இக்கீரைக்கு மட்டுமே உள்ள சிறப்பம்சமாகும். வளரும் குழந்தைகளுக்குக் கால்சியமும், பாஸ்பரஸும் மிக அவசியமானவை யாகும். 100 கிராம் உலர்ந்த சேப்பங் கீரையில் 1500 மில்லிகிராம் கால்சி யமும், 308 மில்லிகிராம் பாஸ்பரஸும் கிடைக்கின்றன.

சேப்பங்கிழங்கின் இலைகள் முக்கோ ணவடிவில் பெரிய அளவில் இருக்கும் பார்க்க மிகவும் அழகானவையாகவும் இருக்கும்.

சிறந்த உணவான சேப்பங்கீரையை வேகவைத்த தண்ணீரில் நெய் கலந்து குடித்தால் வயிற்றுவலி, மலச்சிக்கல் முதலியவை உடனே குணமாகும்.

சேப்ப இலையின் சாறு வெட்டுக்காயங்களை உடனே ஆற்றும். வெட்டுக்காயத்தின் மீது சேப்பங்கிழங்கின் இலைசாற்றை சில துளிகள் விட்டால் போதும்.

மூல நோய்க்கு மிகச்சிறந்த உணவு மருந்து, இக்கீரை. காதுவலி, காதில் சீழ் வடிதல் முதலியவை குணமாக சேப்பங்கீரைச் சாற்றினை துளியளவு காதில் விட்டால் போதும்! காதுவலி குறையும் குணமாகும். காதில் உள்ள சீழ் நீங்கும்.அதனால் ஏற்பட்ட புண்ணும் உடனே குணமாகும்.

பூச்சிகள் கடித்த இடத்தில் இக்கீரைச் சாற்றைப் பூசினால் நஞ்சு இறங்கிவிடும். வலியும் குறையும்.

புளி சேர்த்துச் சமைத்துண்பதால் சேப்பங்கீரை இரத்தக் கடுப்பை குணமாக்குகிறது. தாது விருத்தியை அதிகரித்து குழந்தைப் பேறு கிடைக் கவும் பயன்படுகிறது.

சேப்பங்கிழங்கின் தாயகம் ஐரோப் பாவும் மேற்கு ஆசியாவும் ஆகும். சேப்பங்கிழங்கின் மாவுச்சத்து, கீரை யின் மருத்துவக்குணங்கள் முதலிய வற்றிற்காக இந்தியா உட்பட பல நாடுகள் சேப்பங்கிழங்கு உற்பத்தியில் அதிகம் ஈடுபாடு காட்டிவருகின்றன.

வீட்டுத் தோட்டங்களில் சேப்பங் கீரையை உணவிற்காக வளர்ப்பது இந்தியாவின் அதிகரித்துள்ளது. இது சிறந்த மூலிகையாகும்.


மூலநோய் குணமாகவும், மூளை வளர்ச்சி அதிகரிக்கவும் சேப்பங்கிழங்கு, சேப்பங்கீரை முதலியவற்றை உணவில் அடிக்கடி இடம் பெறச் செய்யுங்கள்.

பாபாவின் ஓவியம்

திரு.சியாமராவ் ஜெயகர் என்பவரால் எண்ணெய் ஓவியமாக இந்த பாபாவின் படம் வரையப்பட்டது. திரு.பிரதான் என்பவர் இந்த ஓவியரை அழைத்து இரண்டு படங்கள் வரையச் சொன்னார். பாபாவும் தன் ஓவியம் வரையப்பட சம்மதித்து "இன்னும் வரை. வேகமாக வரை. சந்து பொந்துகளில் எல்லாம் வந்து அமரப் போகிறேன் நான்" என்றாராம்.

இன்று மூலை முடுக்குகளில் எல்லாம், தான் கோவில் கொள்ள போவதைத்தான் அன்று தன் தீர்க்க தரிசனத்தால் அவ்வாறு பாபா கூறினார் போலும். மகா சமாதிக்குப் பிறகு துவாரகாமாயியில் 60 ஆண்டு காலம் பாபா எந்த இடத்தில் வாழ்ந்து வந்தாரோ அந்த இடத்தில் ஒரு மண்டபத்திற்குள் இந்த படம் வைக்கப்பட்டிருக்கிறது.





சிகப்புநிறத் தூண்

துவாரகாமாயின் உள்ளே சென்று கொண்டிருக்கும் போது உங்களுக்கு இடப்பக்கம் ஒரு அடுப்பையும் அதற்கு நேர் எதிரில் உங்கள் வலப்பக்கம் ஒரு சிறிய சிகப்பு நிற மரத்தூணைக் காணலாம். தற்போது இந்த தூணைச் சுற்றி ஸ்டெயின்லெஸ் ஸ்டீலால் ஆன தடுப்பு ஒன்று போடப்பட்டிருக்கிறது.

பாபா இந்த தூணில் சாய்ந்து கொண்டு எதிரில் உள்ள அடுப்பில் சமைப்பார். ஒரு முறை நானா சாகேப் டெங்லே பாபாவை வணங்க வந்தபோது (அது ஒரு குரு பூர்ணிமா தினம்) பாபா மறுத்து அவரை அந்தத் தூணுக்கு வழிபாடுகள் செய்யச் சொல்வார். இந்த தூணின் சிறப்பம்சம் என்னவென்றால் இதன் மீது நாம் சாய்ந்து ஒரு அரை மணி நேரம் அமர்ந்து கொண்டால் உடல் வலி, மூட்டு வலி ஆகியவை பறந்து போகும்.

பாபா துவாரகாமாயியை விட்டு வெளியே செல்லும் ஒவ்வொரு முறையும் அதேபோல் திரும்ப வரும் ஒவ்வொரு முறையும் இந்தத் தூணைச் சுற்றி மூன்று முறை வலம் வருவாராம்.

எலைட் எண்டர்பிரைசஸ்

தொப்பம்பட்டி பிரிவு, HDFC பேங்க் அருகில், MTP ரோடு,
கோயம்புத்தூர் - 641 017. செல்: 98434 40806

Authorized Distributor: GS Caltex

Authorized Dealer: Castrol | SERVO | MAK Lubricants | Shell Lubricants | MOTUL | AMARON | SF SONIC

GST No: 33BMOPS1392A1Z3

ELITE ENTERPRISES









GS Caltex
Castrol

P.Sivasaravanan B.E.,
9843440806

Products

- Automobile Engine Oils
- Hydraulic Oils
- Gear Oils
- Compressor Oils
- Cutting Oils
- Greases-Industrial
- Greases-Automobile
- Brake Oil
- Coolant Oil

ELITE ENTERPRISES

All Two Wheeler & 4 Wheeler Batteries Available Here

SF SONIC
AMARON
LASTS LONG. REALLY LONG.









HOME UPS AVAILABLE

ஆட்டோ மொபைல் ஆயில், இண்டஸ்ட்ரியல் ஆயில், க்ரீஸ், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன பேட்டரிகள், வீட்டு உபயோக UPS, பேப்பரிகள் கிடைக்கும்.

சித்தர்களின் ஜீவ சமாதி தரிசனம்



- அயனாவரம்
வெங்கடேசன்
9941782523

சித்தர்களின் ஜீவசமாதி தரிசனத்தில் இம்மாதம் நாம் எலப்பாக்கம் ஸ்ரீலஸ்ரீ "இராமசந்திர குருசாமி" சித்தரின் ஜீவபீடத்தை தரிசனம் செய்வோம் வாருங்கள்.

ஸ்ரீலஸ்ரீ "இராமசந்திர குருசாமி"

சென்ற 30.12.2022 அன்று 100 ஆம் ஆண்டு குரு பூஜை கண்ட மகான் இவர். 100 ஆம் ஆண்டு குருபூஜை மிகச் சிறப்பாக ஜீவபீடம் உள்ள ஊரான எலப்பாக்கம் கிராமத்தில் நடந்தது.

அகஸ்தியர் மரபில் வந்த கையிலாயகிரி பிரம்ம பீடத்து ஸ்ரீ நிஜானந்த யோகீஸ்வரரின் பிரதம சீடராகிய சம்பத்திரி ஸ்ரீ அச்சுதானந்த சுவாமிகளின் முதலாவது பிரதம சீடர் தான் நமது சதனமாபுரி எனும் எலப்பாக்கம் மகாசித்தர் ஸ்ரீலஸ்ரீ இராமசந்திர குருசாமி சுவாமிகள்.

தன் சொற்பொழிவின் மூலம் மக்களிடையே உள்ள மூட பழக்க வழக்கங்களை ஒழித்து அவர்களுக்கு, நேர்மையான் ஆன்மீக வழியை காண்பித்தார். தான் அணிந்திருந்த கம்மலை விற்று சென்னைக்கு வந்து



கண்ணமங்கலம் அச்சுதானந்த சாமிகளிடம் தியானம், தவம், சித்துக்களைக் கற்றார். அவரையே தனது குருவாக ஏற்றுக் கொண்டார்.

சுவாமிகள் பஜனை செய்ய வைத்திருக்கும் இசைப் பொருளான பானையை, பஜனை முடிந்ததும் கவிழ்த்து வைத்து விடுவார். மறுநாள் எடுத்து பார்க்கையில் அதனுள் கற்கண்டு துண்டுகள் இருக்கும். அதை தன்னை காணவரும் அடியவர்களுக்கு பிரசாதமாகக் கொடுப்பார். தன்னை நாடி வரும் அடியார்களின் பசி போக்க தன்னிடம் இருந்த விபூதி பேழையில் பணத்தை வரவழைத்து அவர்களுக்கு கொடுத்து உதவுவார்.



சுவாமிகள் தண்ணீர் நிரம்பிய ஏரியின் நடுவே கருங்காலி மனை மீது ஆசனம் இட்டு (மூழ்காமல்) யோகம் செய்தவர்.

விஷகடிபட்ட எவராகிலும் இவரிடம் வந்தால் தன்னுடைய பிரம்பால் விஷத்தை நீக்கும் வல்லமை படைத்தவர்.


நமது சுவாமிகள் மூலிகை வைத்தியத்திலும் கைதேர்ந்தவர். எலப்பாக்கம் மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் காலரா நோய் தாக்கிய போது, நமது சித்தரும் அவருடைய தர்ம பத்தினி இராமகிரி அம்மையாரின் துணையோடு பராசக்தி மூலிகையால் வைத்தியம் பார்த்து ஊர் மக்களை காப்பாற்றினார்கள்.

அதனால் அம்மையாரை எலப்பாக்கம் பெண் தெய்வம் என போற்றினர்.

பெருமுக்கல் மலையின் அருகில் இருந்த ஊர்களில் மழை இல்லாமல் இருந்ததைக் கண்டு தனது 32 ஆம் வயதில் குருநாதர் அச்சுதானந்தரிடம் சென்று குரு உபதேசம் பெற்று யாகங்கள் செய்து மழையை வரவழைத்தார் நம் மகாசித்தர்.

அதுபோல் கீழ் சேவூர் கிராமத்தில் அமுரி யோகம் செய்து தனது உடம்பில் அமுரியை பூசி தங்கத்தை வரவழைத்து காட்டினார்கள். சுவாமிகள் ஹடயோகத்தில் மூன்றரை அடி உயரம் வரை அந்தரத்தில் அமர்ந்து யோகம் செய்த யோக ஞானி ஆவார்.

அச்சிறுப்பாக்கத்தில் பசுபதீஸ்வரர் ஆலயத்தில் ஸ்ரீலஸ்ரீ சுரக்காய் சாமிகளின் அனுகிரகத்தோடு பல யோகங்கள் செய்து, இறுதியில் நவ கண்ட யோக சித்து விளையாட்டையும் செய்து, நிறைவில் அனைத்தும் மாயை என்றுணர்ந்து, இதைக்



கொண்டு பரபிரம்மத்தை அடைய முடியாது என்று தாமே பிரம்மமாக வாழ்ந்தார்கள்.

சுவாமிகள் பல இடங்களில் சொற்பொழிவுகள் ஆற்றிய நிலையில் புதுச்சேரி அருகில் உள்ள நல்லாவூர் என்னும் இடத்தில் சொற்பொழிவாற்றும் போது "இனி இந்த நடமாடும் உடலை பார்ப்பது அரிது" என்று சொல்லி சென்றார்.

அதுபோலவே நமது சித்தர் 26.12.1922 செவ்வாய் கிழமை, உத்திரட்டாதி நட்சத்திரம், அஷ்டமி திதி, அன்று ஜீவ யோக ஞான நிஷ்டையில் அமர்ந்து ஜீவசமாதி ஆனார்கள்.

சித்தர் ஜீவமுக்தி அடைந்ததும், அவரது சீடர்கள் பீடத்தின் அருகிலேயே தங்கி 24 நாட்களும் பூஜை செய்து குருவை வணங்கி 24 நாளாவது நாளன்று ஜீவசமாதி யின் மீது உள்ள சந்தன மர பலகைகளை அகற்றி குருவை தரிசனம் செய்தார்கள்.

அப்போது குருநாதர் அமர்ந்து இருந்த காட்சியைக் கண்டு குருவை வணங்கி நின்றனர். சாமிகளின் மனைவியான இராமகிரி அம்மாள் தன் கழுத்தில் அணிந்திருந்த பொன் தாலி சரட்டினை, சாமிகளின் திருவடிகளில் சமர்ப்பணம் செய்து வணங்கினார். சுவாமிகளின் சமாதிக்குப்பின்,ஜீவபீடத்திற்கு வரும் அடியார்களுக்கு இராமகிரி அம்மையார் அன்னதானம் செய்து வந்தார்கள்.

இன்றும் பௌர்ணமி, மாத குருபூஜை மற்றும் விஷேச நாட்களில் அன்னதானம் நடக்கிறது.

எலப்பாக்கத்தில் சாமிகள் ஜீவபீடம் கொண்டுள்ள இடத்தின் அருகிலேயே சாமிகளின் குரு பக்தியும், எலப்பாக்கம் குலதெய்வம் என்று போற்றப்பட்ட இராமகிரி அம்மையாரும், சாமிகளின் குரு புத்திரரான கோதண்ட சாமிகள் மற்றும் சாமிகளின் பேரன் முத்து கிருஷ்ணன் ஆகிய மூவரின் சமாதி பீடங்கள் அமைந்துள்ளன.

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் சித்தரின் ஜீவ பீடத்திற்கு வந்து வணங்கி, தான் பெற்ற அனுபவத்தை சாமிகளின் பேரனுக்கு தன் கைப்பட கடிதமாக எழுதிக்

கொடுத்தார். அக்கடிதம் இன்றும் ஜீவபீடத்தில் உள்ளது. வாழும்போது நாம் தரிசனம் செய்ய முடியாத சித்தரை, அவரின் ஜீவபீடத்திற்கு சென்று தரிசனம் செய்து நம் கர்ம வினையின் வீரியத்தை குறைத்து கொள்வோம்.

சித்தர்களின் சீவபீடத்தை தொழு வோம்!

சீரான வாழ்க் கையை சிக்கலின்றிப் பெறுவோம்!

ஜீவபீட ஆலய முகவரி:

ஸ்ரீலஸ்ரீ இராமச்சந்திர குருசாமி ஜீவபீடம், அச்சரப்பாக்கம் PDO ஆபிஸ், எலப்பாக்கம் கிராமம், மதுராந்தகம் தாலுகா, செங்கல்பட்டு மாவட்டம் – 603201.(அச்சரப்பாக்கம் தாண்டி அச்சரப்பாக்கம் PDO ஆபிஸ், எலப்பாக்கம் கூட்ரோட்டில் இருந்து 12 கி.மீ தொலைவில் நமது சித்தரின் ஜீவபீடம் உள்ளது)

இரயில் வண்டி மார்க்கம்:

சென்னை எழும்பூர் விழுப்புரம் இறங்கும் இடம்: மேல்மருவத்தூர். இங்கிருந்து ஷேர் ஆட்டோ மூலம் சீவபீடத்திற்கு செல்லலாம்.

பேருந்து மார்க்கம்:

சென்னை கோயம்பேடு மேல்மரு வத்தூர். எலப்பாக்கம் கூட்ரோட்டில் இருந்து ஷேர் ஆட்டோ மூலம் சித்தர் பீடம் செல்லலாம்.

– (தொடரும்)

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன் M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

பணிந்தோர்க்கு பரந்தாமன்



கோவிந் தாமோதர் பண்டிட் குல்வா மாவட்டத்தில், பல்சே என்ற குக்கிராமத்தில வசித்து வந்தார். கோவிந் தன் மகளுக்கு பொருத்தமான வரனை தேடி கடுமையாக முயற்சித்தும், சரியாக அமையாததால் மிகுந்த வருத்தத் தில் இருந்தார்.

ஒரு நாள் தன் நெருங்கிய நண்பரிடம் பேசிக்கொண்டிருந்தபோது, பேச்சு ஞானிக ளைப் பற்றி திரும்பியது.

அந்த நண்பர் கோவிந்திடம் பாபாவைப் பற்றி பேசத் தொடங்கினார். அப்போது திடீரென்று அவர், கோவிந் உங்கள் மகளுக்கு 15 நாட்களுக்குள் திருமணம் நடந்தால், நாம் சீரடிக்குச் சென்று பாபாவின் தரிசனத்தைப் பெறுவோம் சம்மதமா என்றார். கோவிந்தும் அதற்கு ஒத்துக் கொண்டு சரி அப்படியே செய்வோம் என்றார்.

ஹைதராபாத்தை சேர்ந்த ஹர்தேக் குடும்பத்தினர் தங்களது மகனுக்கு அவரது பெண்ணைக் கேட்டு வந்தபோது வியப்பின் உச்சிக்கே சென்று விட்டார் கோவிந். மணமகனுக்கு பெண்ணை மிகவும் பிடித்திருந்ததனால் அடுத்த முகூர்த்தத்திலேயே திருமணம் மிகச்சிறப் பாக நடைபெற்றது.

கோவிந் திருமணத்திற்காக எங்கேயும் எதற்காகவும் அதிக சிரமப்படாமல் 15 நாட்களுக்குள் நடந்து முடிந்துவிட்டது. அதை அவரது நண்பர் சுட்டிக்காட்டி, பாபாவின் தரிசனத்திற்கு செல்ல வேண்டும் என்பதனை நினைவுப் படுத்தினார்.

கோவிந்தும் தன் நண்பர் ஒருவரிடம் 30 ரூபாய் கடன் வாங்கிக்கொண்டு சீரடி புறப்பட்டார். அவர்கள் சீரடி சென்றதும் முதலில் மாருதி கோவிலுக்குச் சென்றனர். அப்போது பாபா தன் பக்தர்களுடன் லெண்டிப் பார்க் சென்றிருந்தார். ஆகவே அவர்கள் துவாரகாமாயி சென்று அங்கேயே அமர்ந்து கொண்டனர்.

அங்கு கூடியிருந்த பக்தர்கள், பாபா லெண்டிக்கு புறப்படுவதற்கு முன்பு மிகவும் கோபமாக இருந்ததாகவும், எனவே அவர்கள் கீழே இறங்கி சபா மண்டபத்தில் அமர்வதே புத்திசாலித்தனம் என்றும், இல்லாவிட்டால் பாபாவின் கோபம் உங்களின் மீது திரும்பக் கூடும் என்று கூறினர்.

அவர்களின் அறிவுரைப் படி கோவிந் கீழே இறங்கி சபா மண்டபத்தில் அமர்ந்து பாபாவின் வரவிற்காக காத்திருந்தார். சிறிது நேரத்தில் பாபாவும் அவரது தொண்டர்களும் சிரித்து பேசிக் கொண்டு மிகவும் மகிழ்சியாக ஆராவாரமாக வந்தனர். பாபாவின் முகத்திலும்கூட கோபத்திற் குண்டான அறிகுறியே இல்லை. இதைக் கண்டு கூடியிருந்த பக்தர்கள் ஆச்சர்யம் அடைந்தனர்.

மசூதிப் படிகளில் ஏறுவதற்குமுன்

பாபா, நான் குளிப்பதற்கு தண்ணீர் கொண்டு வாருங்கள் என்றார். அப்போது அவர் துவாரகாமாயியின் படிக்கட்டுகளில் நின்றிருந்தார். பக்தர்கள் தண்ணீர் கொண்டுவந்து பாபாவின் பாதங்களை அலம்பினார்கள். கோவிந் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொண்டு பாபாவின் பாதங் களை கழுவிய தண்ணீரை கைகளில் ஏந்திப் பருகினார்.

பின்பு படியேறி வந்து தேங்காய், வெற் றிலை பாக்கு,ஆகியவற்றோடு ஒரு ரூபாய் தட்சிணையையும் வைத்து பாபாவின்முன் சமர்ப்பணம் செய்தார். பிறகு தன் தலையை பாபாவின் பாதங்களில் வைத்து சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தார்.

உடனே பாபா, நீ என் பாதத்தில் உன் தலையை வைத்து நமஸ்காரம் பண்ண வேண்டியதில்லை. தொலைவில் இருந்து நமஸ்காரம் செய்தால்கூட அது என்னை வந்தடையும் என்றவர் தட்சிணையாக வைக்கப்பட்டிருந்த ஒரு ரூபாயைப் பார்த்த பாபா, ஏன் ஒரு ருபாய் கொடுக்கிறாய் எனக்கு இன்னொரு ரூபாய் கொடு என்றார். கோவிந் இன்னொரு ரூபாயை பாபாவிடம் கொடுத்தார்.

பிறகு அந்த ஒரு ரூபாயை தன் கைகளால் சுண்டிவிட்டார். பின் கோவிந் தைப் பாரத்து, நான் உனக்கு முப்பது ரூபாய் கடன் பட்டுள்ளேன். என்று திரும்பத் திரும்பக் கூறினார்.

உண்மையில் பாபா கோவிந்திடம் கடன் பட்டிருக்கவில்லை. கோவிந்துதான் பாபாவிடம் வருவதற்கு 30 ரூபாய் கடன் வாங்கிக் கொண்டு வந்திருக்கின்றார்.

பாபா தன் பக்தர்களில் ஒருவரிடம், நாராயணா, அந்த பாபு சாகேப் இங்கே வந்தால் அவனை நன்றாக சாத்து. அவன் என்னிடம் இருந்து நாலாயிரம் பணத்தை வாங்கிக்கொண்டு, இன்னும் திருப்பிக் கொடுக்கவில்லை. கேட்டால் கொடுக்கின்றேன், கொடுக்கின்றேன்,



என்று கூறுகிறானே தவிர இதுவரை கொடுத்தபாடில்லை. என்றார்.

இதைக்கேட்டு கோவிந் திடுக்கிட்டார். ஏனெனில் பாபா கூறிய அந்தத் தொகையை, பாபு சாகேப் என்ற பெய ருடைய நபருக்கு கடனாகக் கொடுத் திருந்தார். கேட்கும் போதெல்லாம் கண்டிப் பாக திரும்பிக் கொடுத்துவிடுவதாக கூறும் அவர் இதுவரை திருப்பிக் கொடுக்கவில்லை

அவர்கள் புறப்படும் நேரம், பாபா கோவிந்திடம், நானும் உன்னோடு வரப்போ கிறேன். இங்கு மக்கள் என்னை மிகவும் தொந்தரவு செய்கின்றனர் என்று கூறினார். பாபா என்ன சொல்கின்றார் என்று கோவிந்துக்குப் புரியவில்லை.பிறகு கோவிந்துக்கு பாபா உதியை கொடுத்து, அவரது நெற்றியில் இட்டு அவர் புறப்பட அனுமதித்தார்.

தன்னை முழுமையாக நம்பி எவர் ஒருவர் சரணாகதியடைகின்றாரோ அவர்க ளுக்கு சாயிநாதர் பரந்தாமனாகவே காட்சி தந்து அவர்களின் இடர்களை போக்குவார் என்பதை இக்கதையின்மூலம் நாம் அறியலாம்.

அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊன முற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்ன தான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

ஆன்லைனில் அனுப்ப:

S.Jayanthy, INDIAN BANK
AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056
(Purasaiwakkam Branch) Chennai
Gpay: 6385129372

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திரு. சுந்தர்சாய் குடும்பத்தார். திருவல்லிக்கேணி.ரூ.3050.
திரு. சுந்தரவள்ளி குடும்பத்தார். மந்தைவெளி. ரூ.3000.
திரு.சுனில் குடும்பத்தார்.USA.ரூ.3000.
திரு.பாலகிருஷ்ணன்.அண்ணாநகர் ரூ.3000.
திருமதி.ஹேமாவதி நமசிவாயம். சாலிகிராமம்.ரூ.2000.
திரு.ஜானகி கண்ணன். அயனாவம். ரூ 1500.
திருமதி. இந்துமதி.அயனாவரம்.ரூ.1100
திரு.என்.வெங்கடாசலம்.டி.நகர்.ரூ1000.
திருமதி.யோகானந்தம்மகேஸ்வரன். ரூ.1000.
திரு.பி. இராஜகோபால். நங்கநல்லூர். ரூ.1000.
திருமதி.உமா விஜய் ஆனந்த். அயனாவரம். ரூ.800.
திருமதி. வாழ்க வளமுடன் சுமதி. கொளத்தூர்.ரூ.500.
திருமதி. ஹேமா வைத்தியநாதன், குரோம்பேட்டை. ரூ.500

திரு. நாராயணன பாபு. வில்லிவாக்கம். ரூ.500.
திரு. சாய்கிருபா. வாடிப்பட்டி. ரூ.500
திரு.முரளிசாய்ராம். திருநின்றவூர். ரூ.500
திருமதி.பவித்ரா குடும்பத்தார் பெரம்பூர்.ரூ.500
திரு. கேஸ்வர். ஈரோடு. ரூ.500.
திரு.டி.கோவிந்தராஜீ.வேளச்சேரிரூ.500
திரு.கலைச்செல்வன்மதிமலர்.வேதாந்வடலூர் ரூ.500
திரு. தீட்சித் சேயான். பெரம்பூர்.ரூ.501.
திருமதி.முருகேஸ்வரி.திண்டுக்கல். ரூ.500.
திருமதி.பாக்கியவதி.ராணிப்பேட்டை. ரூ.400.
திரு.டி.எஸ். கிருஷ்ணமூர்த்தி.கோவை. ரூ.300.
திருமதி.வரலட்சுமி பிரபாகரன். அயனாவரம்.ரூ.300.
திரு.சுப்பிரமணியன். திட்டை.ரூ.200.
திரு.ரகுபதிராஜா நிஷா. கொளத்தூர்.ரூ.200
திரு.சீனிவாசராவ். சென்னை. ரூ.200
திரு.குமரன் ஸ்டோர்ஸ்.-டிராவல்ஸ். பெரியார் நகர் ரூ.200.
திரு.கே.ராமமூர்த்தி.L.I.C ஏஜெண்ட். கொளத்தூர்.ரூ.200.
திருமதி.லதா பாபு. வேப்பம்பட்டு.ரூ.200.
திரு.ஸ்ரீ கணேஷ் டீ ஸ்டால். விலலிவாக்கம்.ரூ.150.
திரு.மோகன்தாஸ் விமலா. காரைக்கால்.ரூ.130.
திரு.அஸ்வந் குடும்பத்தார். அயனாவரம்.ரூ.100.
திருமதி.ரேகா. அயனாவரம்.ரூ.100.
திருமதி. சாந்திமோகன். AYK. ரூ.100.
திருமதி.அபிராமி அசோக்.AYK. ரூ.100
திருமதி.பத்மா. AYK. ரூ.100.
திருமதி.உமா முருகன்.சின்னாளப்பட்டி. ரூ.100
திருமதி.ஜெயந்திசெல்வநாயகம். மணலி.ரூ.100.
சிவா அரிசி கடை. பெரியார் நகர்.ரூ.50
கொளத்தூர் பல் மருத்துவர்.ரூ.50.
பெரியார்நகர் பாபா பக்தர்கள்.ரூ.50.
திரு.அகஸ்டின் குடும்பத்தார். திருநீர்மலை.அரிசி 25 கி.
திரு.கணபதி, காஞ்சிபுரம். ரூ.100

என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின் ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.



சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 220 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 550 (தபால் செலவு உள்பட)
* ஆயுள் சந்தா – ரு. 2,000 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர்
'சாயி மகராஜ் குருவை தேடி',
17/7 A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

புத்தக வளர்ச்சி நன்கொடையாளர்கள்

திரு. சிவசுப்பிரமணியன்.குடந்தை.ரூ. 500.
திரு.செகன்நாதன். முகப்பேர்.ரூ.500
திருமதி.திலகம்.குரோம்பேட்டை.ரூ.300.
திரு.டி.எஸ். கிருஷ்ணமூர்த்தி. கோவை. ரூ.200.
திரு.வேணுகோபால்.நங்கநல்லூர்.100.

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.



எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.



சாய் ராஜயோகாவின் தயாரிப்பு

அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.


குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068